Registered as a Newspaper · பக்கம் 06 · விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 05 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | பங்குனி 2 | (15.3.94) | செவ்வாய்க்கிழமை | ஓசை 25

## மண்ணெண்ணெய் எடுத்துவர கப்பல் கட்டணம் அறவிடப்படும்

யாழ். குடாநாட்டிற்கு கப்பல் மூலம் எடுத்து வரப்படுகின்ற பொருள்களுள் மண்ணெண்ணெய்க்கு மட்டும் கப்பல் கட்டணம் அறவிட சிறிலங்கா அரசு தீர்மானித்துள்ளதாக யாழ். செயலகவட்டாரங்கள் தெரிவித்தன. இதற்கு முன்னர் கப்பல்மூலம் எடுத்து வரப்படுகின்ற சகல பொருள்களுக்குமான கப்பல் கட்டணம் அறவிடப்படமாட்டாது என சிறிலங்கா அரசு யாழ். அரச அதிபரிற்கு அறிவித்திருந்தது தெரிந்ததே. ஆனால் தற்சமயம் மண்ணெண்ணெய்க்கு மட்டும் கப்பல் கட்டணம் அறவிடப்படவுள்ளதாக யாழ். செயலக அரச அதிபர் எமது நிருபரிற்கு தெரிவித்தார். இருந்தும் தமக்கு இது உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை எனவும் தெரிவித்தார். (பா), (தி)

# கொழும்பு வருகையை மீள்பரிசீலிக்குக

# பாப்பரசரிடம் யாழ். குருமார் கோரிக்கை

## அரசியல் நோக்கத்திற்காக அரசாங்கம் பயன்படுத்துவதற்கான சாத்தியம் அதிகம்

[கொழும்பு]

**சிறிலங்கா ஜனாதிபதி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை விடுத்து அதை மூடி மறைப்பதிலேயே தீவிரம் காட்டிவருகின்றார். அவரது இத்தகைய திட்டத்திற்கு பாப்பரசரின் கொழும்பு விஜயம் சாதகமாகிவிடும். எனவே இனப்பிரச்சினை தீரும்வரை பாப்பரசர் இலங்கை வருவதை நாம் விரும்பவில்லை. இவ்வாறு யாழ். கத்தோலிக்க மதகுருமார்கள் பாப்பரசருக்கு கடிதமொன்றை அனுப்பவுள்ளனர்.**

மேற்படி குருமார்கள் நேற்றுக்காலை கலந்து கொண்ட செய்ப்புப்பணி மாநாட்டிலேயே மேற்படி முடிவு எடுக்கப்பட்டது. இம் மாநாட்டில் கலந்து கொண்ட குருமார்கள் ஒருங்கிணைந்து கையொப்பம் இட்டு பாப்பரசருக்கு அனுப்பவுள்ள கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளதாக அறியவருகின்றது.

நாற்பது வருடங்களாக நிலவும் இனப்பிரச்சினையை மூடிமறைத்து இங்கு இனப்பிரச்சினை யென்று ஒன்று இல்லை இங்கு இருப்பது பயங்கரவாதப் பிரச்சினையே என்றுகூறி, வெளிநாடுகளிலிருந்து ஆயுதங்களையும் பணத்தையும் பெறுவதற்கு முயற்சிகள் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்மூலம் ஓர் இனத்தின் உணர்வுகளைமனிதநேயமற்ற முறையில் மழுங்கடிக்க அரசு முயல்கின்றது. இது ஒரு மனித நேயப் பிரச்சினை என்பதை உலகுக்கு உணர்த்த வேண்டிய இந்த நேரத்தில் தங்களது சிறிலங்காவுக்கான விஜயத்தை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி ஒரு பிரசாரமாக, மக்களின் உணர்வுகளை மழுங்கடிக்க சிறிலங்கா ஜனாதிபதி முயற்சிக்கலாம். இதற்கு தங்கள் விஜயம் உதவியாக இருப்பதை நாம் விரும்பவில்லை. எனவே இப்பிரச்சினைக்கு ஒரு சமாதானத் தீர்வு வரும்வரை உங்கள் விஜயத்தை ஒத்திவைப்பதே நல்லது.

இன பிரச்சினைக்கு நீதியான, நேர்மையான நிரந்தரமான ஒரு தீர்வு ஏற்பட வேண்டும் என்ற கத்தோலிக்க திருச்சபை கிறிஸ்தவ திருச்சபை எடுத்துவரும் நல்லெண்ண முயற்சிகளுக்கு விடுதலைப் புலிகளும் அதன் பிரதிநிதிகளும் பல வகையில் நல்லெண்ண சமிக்ஞைகளை காட்டி வந்துள்ளனர். ஆனால் சிறிலங்கா அரசாங்கமானது எந்தவித சமிக்ஞைகளுக்கும் அல்லது வேண்டுகோளுக்கும் செவிசாய்க்க தயாராக இருப்பதாக எமக்கு தெரியவில்லை. எனவே தாங்கள் எம்மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதார தடையை நீக்குமாறும் நாம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டு மத்தியஸ்தம் அல்ல:



கேரதீவுக் கரையில் மர்மமான முறையில் மரணமடைந்து காணப்பட்ட இளம் பெண்ணின் சடலம் படம்:- இராசேஸ்வரன்

## இளம் பெண் மர்மமரணம்

## கேரதீவு கரையில் சடலம் கிடந்தது

# வெளிநாட்டு மத்தியஸ்தம் அல்ல; புலிகளுடன்பேச உதவுவதே நோக்கம்

## டி. பி. விஜேதுங்காவிற்கு தொண்டமான் கடிதம்

(கொழும்பு)

"விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு உதவுவதே எனது நோக்கம்; வெளிநாட்டு மத்தியஸ்தத்தை நான் கோரவில்லை."

இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான எஸ். தொண்டமான் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிற்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

திரு. தொண்டமான் கடந்த 9ஆம் திகதி ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தின் விபரம் வருமாறு:

இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை காண்பதற்காக நியமிக்கப்பட்டிருந்த பாராளுமன்றத் தெரிவுக்குழு இரண்டு வருடங்களாக கூடி ஆராய்ந்த பின்னரும் தீர்வொன்றை வகுக்கத் தவறியதை அடுத்து பேச்சுவார்த்தை ஒன்றை மீண்டும் ஆரம்பிப்பதற்கான முன் முயற்சியை மேற்கொள்வது உகந்ததாக இருக்குமென நான் கருதுகிறேன்.

ஆலோசனை கொடுக்கும் முயற்சியாகவும் ஓர் அர்த்தத்தைக் கொடுப்பதாகவும் இது அமையும். தற்போதைய முட்டுக்கட்டை நிலையை முடிவிற்கு கொண்டுவர வடக்கில் ஒரு பேச்சுவார்த்தை நடத்துவது உதவியாக இருக்கும்.

சமாதானத்தை காண்பதற்கு தற்போதைய தருணத்தை சாதகமாக பயன்படுத்த முடியும் என்பதே எனது அபிப்பிராயமாகும்.

கனடிய சட்ட நிபுணரான மாரிஸ் வேர்கர் கடிதம் எழுதிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மோதலில் ஈடுபட்டுள்ள தரப்பினரை பேச்சுவார்த்தைமேசைக்கு கொண்டு வருவதில் அரசாங்கத்திற்கு உதவுவதற்கான எனது முயற்சியை புதுப்பிப்பதே எனது நோக்கமாகும்.

எனது மத்தியஸ்த பங்கைப் பயன்படுத்தி சமாதானத்தை காண்பதற்கு இத்தருணத்தை மாரிஸ் வேர்கர் தனது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மன்னார்தீவில் அதிவேக அதிரடி 3 பொலிசார் பலி; ஆயுதங்கள் மீட்பு

(மன்னார்)

இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள மன்னார் தீவில் நேற்று தொடர் காவலரண் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய அதிவேக அதிரடித் தாக்குதலினால் ஒரு காவலரணிலிருந்த மூன்று பொலிசார் கொல்லப்பட்டனர். அக் காவலரணிலிருந்து ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

மூன்று நிமிடங்கள் மட்டுமே இவ் அதிவேக அதிரடித் தாக்குதல் நீடித்தது. இத் தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

மன்னார் தீவுக்கும் கரிசல் சந்திப் பாலத்திற்கும் இடையில் பிரதான வீதியில் அமைந்திருந்த தொடர் காவலரண் மீதே அதிகாலை 12 50மணியளவில் இத் தாக்குதல் நடாத்தப்பட்டது. கடந்த 10-ம் திகதி மன்னார் தீவு பொலிஸ் நிலைய தாக்குதலில் வீரச்சாவடைந்த போராளிகள் நினைவாக இத் தாக்குதல் நடாத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

மன்னார் தீவில் தொடர் காவலரண்கள் மீது நேற்று விடுதலைப் புலிகளால் நடாத்தப்பட்ட அதிவேக அதிரடித் தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| ☆ | ரி-56 1 ரக துப்பாக்கி | — 03 |
| ☆ | ரவைக்கூடுகள் | — 09 |
| ☆ | நடுத்தர ரவைகள் | — 456 |
| ☆ | ஏ கே கோல்சர் | — 02 |
| ☆ | ஜெ ஆர் கைக்குண்டு | — 05 |
| ☆ | ரவைப்பெட்டி | — 01 |

## வீரச்சாவு



லெப். புகழேந்தி/சலாம்

12-03-94 அன்று இரவு 12.45 மணியளவில் மணலாற்றுப் பகுதியில் ஏற்பட்ட எதிர்பாராத வெடிவிபத்தில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த லெப். புகழேந்தி/சலாம் (இராசையா இராமச்சந்திரன் திருகோணமலை) எனும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

# கேரதீவு கரையில் சடலம் கிடந்தது

(தென்மராட்சி)

கேரதீவு இறங்குதுறையை அண்டிய பூனைத்தீவு எனும் கடற்கரையோரப் பகுதியில் இனம் தெரியாத பெண் ஒருவரின் சடலம் நேற்று பொதுமக்களால் மீட்கப்பட்டது. இவரின் அருகே பெண்களுக்கான துவிச்சக்கரவண்டி ஒன்றும் காணப்பட்டது.

இப் பெண்ணின் இடது செவியில் தோடு அணியும் இடத்தில் இரண்டு துவாரங்களும் வலது காலின் குதிப்பகுதியில் அண்மையில் ஏற்பட்ட காயத்தின் தழும்பும் காணப்பட்டது.

இவரது சடலம் மூக்குத்தி உட்பட சகல நகைகளுடனும் காணப்பட்டது. பச்சைநிற புள்ளியுடைய பாவாடையும், வெள்ளைநிற சட்டையும் அணிந்திருக்கக் காணப்பட்டது.

பரந்த முகமுடைய இவர், சுமார் 5 அடி உயரமுடையவர். இவரது சடலத்துக்கு அருகில் பெண்களுக்கான 'ஏசியா' துவிச்சக்கர வண்டியும், துவிச்சக்கரவண்டியின் பின் பகுதியில் குழைகள், வைக்கோல், கோம்பைகள் போன்றன காணப்பட்டன.

இச்சடலம் சாவகச்சேரி மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் அடையாளம் காண்பதற்காக யாழ். போதனா மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்டது.

இவரது மரணம் தொடர்பாக காவல் துறையினர் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். ((86)

# 'நரோமா'வில் அதிகளவு பயணிகள் செல்ல அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டிற்கும் திருகோணமலைக்கும் இடையிலான "நரோமா" கப்பல் அதிக அளவு பயணிகளை ஏற்றியிறக்க சிறிலங்கா அரசு அனுமதித்துள்ளதாக தெரியவருகின்றது.

இதற்கு முன்னர் ஒரு முறைக்கு சுமார் 20 பயணிகள் விகிதம் இங்கிருந்து திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஆனால் தற்சமயம் ஒரு முறைக்கு சுமார் 125பேர் அக் கப்பலில் ஏற்றிச் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

அத்துடன் "நரோமா" கப்பலின் ஒவ்வொரு முறையும் வடக்கே பயணத்தின் போது தீவுப்பகுதியைச் சேர்ந்த பயணிகள் அதிகமாகவும் யாழ்ப்பாணப் பயணிகள் குறைவாகவும் முன்னர் அனு

(6ஆம் பக்கம் பார்க்க)

## இன்று திறக்கப்பட மாட்டாது

இன்று குடும்பப் பதிவு அட்டைச் செயலகங்கள் அனைத்தும் மூடப்பட்டிருக்கும் என்பதை குடும்ப அட்டைப் பகுதியினர் பொதுமக்களுக்கு அறிவித்துள்ளனர்.

## 'நரோமா' கப்பல் பயணிகள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

"நரோமா" கப்பலில் பிரயாணம் செய்வதற்கு பெயர் பதிவு செய்த அனைத்துப் பயணிகளும் இன்று நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் பருத்தித்துறை இறங்குதுறைக்கு தவறாது சமுகமளிக்குமாறு யாழ். அரச அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார்.

எனவே இக் கப்பலில் பய

(6ஆம் பக்கம் பார்க்க)

## இன்று படகுச்சேவை

ஊரி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

# மாணவர் மதிய உணவுக்கு கூடுதல் பணம் கிடைக்கும்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் மதிய உணவுக்கான பணத்தை அதிகரிப்பது தொடர்பாக அரசு ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. மதிய உணவுக்கான கூப்பனைப் பெற விண்ணப்பிப்பவர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு இந்த அதிகரிப்பு தொடர்பாக அரசு தீர்மானத்தை மேற்கொள்ளும் என்று கல்வி கலாசார அமைச்சர் டபிள்யூ. ஜே. எம். லொக்கு பண்டார தமது அமைச்சில் கடந்த 8-ம்திகதி நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

தற்போது சகல மாணவர்களுக்கும் மதிய உணவுக்கான

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


**காருண்யா சைனீஸ்**

உத்தியோகஸ்தர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். மதிய உணவு--மீன், இறைச்சி, முட்டை, மரக்கறிப் பாசல்கள் உங்கள் இடங்களுக்கு டெலிவரி (Delivery) செய்யப்படும். விபரங்களுக்கு: KARUNYA CHINESE, 166 1st Cross Street Jaffna. (பாடசாலை வைபவ ஓடர்கள் சகாயவிலையில்) (7718)

**பாலர் ஆசிரியர் ஆகலாம்**

ஜி.வி.ஈ (OIL) கடைசித் தகைமை விரைவில் பயிற்சி வகுப்பு ஆரம்பம்சனி, ஞாயிறு வகுப்பிற்கு வர முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம் உயர் கலைக்கல்லூரி ஆனைப்பந்தி -யாழ்ப்பாணம். (7737)

**கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு**

கைவலன் பிறவுண் ஒரு கிழமை வளர்ச்சியடைந்த பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு ''மல்லிகா பதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய் (7738)

**என்றும் எமக்கு மரணமில்லை**

தாய்நாடு காக்கும் போரில் (1941-1945) பங்குபற்றி உயிர்நீத்த சோவியத் கவிஞர்களின் கவிதைகள் விற்பனையாகிறது, யாழ்-வசந்தம், தமிழ்த்தாய் புத்தகசாலை. (7745)

**'விடுதலை' மருகத்தில் புதிய உலகம்**

வாங்கிப்படியுங்கள் அடுத்த இதழுடன் அன்புப்பரிசு 'திடல் திடம் திறன்' நற்சமூக நடு நிலையம் 115, 4-ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம் (புதிய உலகம் ரூ 15) (7741)

**தவறிவிட்டது**

கிளாலி இக் கரையில் இல, 44, பெனான்டோ வீதி, வெள்ளவத்தைக்கு விலாசமிட்ட தபாலுறையில் 1 பெரிய புகைப்படமும் வேறு சில புகைப்படங்களும் 11-ம் திகதி வெள்ளிக்கிழமை பிரயாணத்தின் போது தவற விடப்பட்டுள்ளது. அதை கண்டு எடுத்தவர்கள் ஈழநாதத்தில் ஒப்படைக்குமாறு வேண்டுகிறேன் இப்படிக்கு அ. வரதராஜா (அமரு) (7747)


## கரவெட்டி கோட்ட உடற்பயிற்சி போட்டிகள்

(பருத்தித்துறை)

கரவெட்டி கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையேயான உடற்பயிற்சிப் போட்டிகள் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் கரவெட்டி பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு சி, சிவராஜா தலைமையில் நடைபெற்றது, இவ் உடற்பயிற்சிப் போட்டியிலும் பரிசளிப்பு விழாவிலும் யாழ். வடக்கு வலய கல்விப் பணிப்பாளர் திரு கந்தசாமி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்,

15வயதிற்குட்பட்ட ஆண்கள் பிரிவில் இமையாணன் அ.த.க பாடசாலை 1ஆம் இடத்தையும் கரணவாய் பெண்கள் பல வித்தியாலயம் 2ஆம் இடத்தையும், நெல்லியடி மத்திய மகா வித்தியாலயமும், விக்னேஸ்வராக் கல்லூரியும் 3ஆம் இடங்களையும் பெற்றனர், பெண்கள் பிரிவில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி 1ஆம் இடத்தையும் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி 2ஆம் இடத்தையும் கம்பர்மலை அ.த.க பாடசாலை 3ஆம் இடத்தையும் பெற்றனர்'

17வயதிற்குட்பட்ட ஆண்கள் பிரிவில் இமையாணன் அ.த.க பாடசாலை 1ஆம் இடத்தையும், உடுப்பிட்டி அ.மி.த.க பாடசாலை 2ஆம் இடத்தையும், நெல்லியடி மத்திய மகாவித்தியாலம் 3ஆம் இடத்தையும் பெற்றன. பெண்கள் பிரிவில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி 1ஆம் இடத்தையும், வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி 2ஆம் இடத்தையும், இமையாணன் அ.த.க பாடசாலை 3ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டன

19வயதிற்குட்பட்ட ஆண்கள் பிரிவில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் 1ஆம் இடத்தையும், உடுப்பிட்டி அ.மி.த.க பாடசாலை 2ஆம் இடத்தையும், விக்னேஸ்வரா கல்லூரி 3ஆம் இடத்தையும் பெற்றன. பெண்கள் பிரிவில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி 1ஆம் இடத்தையும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் 2ஆம் இடத்தையும், விக்னேஸ்வரா கல்லூரி 3ஆம் இடத்தையும் பெற்றன. கல்விப்பணிப்பாளர் திரு கந்தசாமி பரிசில்களை வழங்கினார் (25)

## திருட்டு சைக்கிளை விற்க முயன்றவர் சிக்கினார்

(யாழ்ப்பாணம்)

பூட்டியிருந்த சைக்கிளை திருடிச் சென்றவர் அதனை விற்பதற்கு பேரம் பேசிக் கொண்டிருந்த போது சைக்கிள் உரிமையாளரிடம் மாட்டிக்கொண்டார். நேற்று முன் தினம் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:- நாவற்குழி சிலன்நகர் வீடமைப்புத் திட்டத்தில் வசிக்கும்மோகன் என்பவர் யாழ் ஐந்து சந்தியில் உள்ள உறவினர் வீடொன்றிற்குச் சென்று வெளியே சைக்கிளை நிறுத்திப் பூட்டி விட்டு உள்ளே சென்று திரும்புவதற்குள் அதனை எடுத்து தனது சைக்கிளின் பின்புறத்தில் வைத்துக் கட்டிக் கொண்டு பிரஸ்தாப திருடன் சென்று விட்டானாம், இதனை நேரில் பார்த்த இப்பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரின் உதவியுடன் திருடப்பட்ட சைக்கிளின் உரிமையாளர் பல இடங்களிலும் தேடி அலைந்து, கல்வியங்காட்டுப் பகுதியில் உள்ள கள்ளுத் தவறணை ஒன்றில் சைக்கிளுடன் திருடனைக் கண்டாராம். அங்கு கள் அருந்தியவாறு பேரம் பேசிக் கொண்டிருந்த அத் திருடனைப் பிடித்து தனது சைக்கிளை மீட்டதோடு அத் திருடனை தமிழீழ காவல்துறையினரிடம் ஒப்படைத்தாராம். (22)

## இன்றைய நிகழ்வுகள்

(கொழும்புத்துறை)

தென்மட்டுவில் வேரக்கேணி அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி திருக்கோவில் இலட்சார்ச்சனை விழா இன்று ஆரம்பமாகிறது. இது தொடர்ந்து பத்து நாள் இடம் பெறும்: இறுதி நாளில் நவகுண்ட சகிதம் (09) 1008 அஷ்டோத்திர சகஸ்ர சங்காபிஷேகம் பிரதம குரு

(யாழ்ப்பாணம்)

பொற்பதி விளையாட்டுக் கழகத்தினருக்கும் யாழ். பல்கலைக்கழக ஹொக்கி அணியினருக்கும் இடையிலான போட்டி இன்று 15ஆம் திகதி மாலை 4-30 மணியளவில் பழைய ஹொக்கிமைதானத்தில் இடம்பெறவுள்ளதாக பல்கலைக்கழக அணித் தலைவர் ...

## கல்வி கற்பதற்கு வெளிச்ச வசதி

யாழ் அருச்சுனா வீதியில் இயங்கி வரும் வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்தில் தினமும் இரவு நேரத்தில் 'பெற்றோமக்ஸ்' வெளிச்ச வசதியுடன் மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர், சுமார் ஐம்பது மாணவர்கள் மாலை ஆறு மணி தொடக்கம் இரவு ஒன்பது மணிவரை இவ்வாறு கற்று வருவதாகவும், பெற்றோமக்ஸ் இப்பாடசாலையில் பயிலும் மாணவரின் பெற்றோர் ஒருவரால் அன்பளிப்புச் செய்யப்பட்டதாகவும், இதற்கான மண்ணெய் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் தீவகக் கோட்டத்தினரால் வாரந்தோறும் வழங்கப்படுவதாகவும் மேற்படி வித்தியாலய அதிபர் தெரிவித்தார் (22)


**ஒப்புநோக்குநர் தேவை**

எமது நிறுவனத்தில் பணியாற்றுவதற்கு அனுபவமுள்ள ஒப்புநோக்குநர் தேவை: பகலிலும் சிலவேளை இரவிலும் கடமையாற்றக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும். முன் அனுபவம் உடையோர் மாத்திரம் நேரில் வரவும்.

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். (இ) ஈழநாதம்

**சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்கா சுன்னாகம் தெற்கு**

மேற்படி நிலையத்தின் பாலர் கல்வி ஆசிரியர் வெற்றிடத்திற்கு தகுதியானவர்கள் விண்ணப்பிக்கவும் உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

22-03-94 காலை 10.00 மணிக்கு கீழ்வரும் விலாசத்தில் ஆவணங்களுடன் நேரில் வரவும்.

யாழ் மாவட்டச் செயலகம்,
அரசியற்துறை,
கோண்டாவில்.
(7748)


**அந்தியேட்டிக்கிரியை அழைப்பிதழ்**

**அமரர் திரு. வடிவேல் பரமகுருநாதர்**

தோற்றம்: 1928 05 09 மறைவு: 1994.02.17

பருத்தித்துறையை பிறப்பிடமாகக் கொண்டவரும், வவுனியா பத்தினியார் மகிழங்குளத்தில் வசித்து வந்தவருமாகிய இளைப்பாறிய படவரைநர் (நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனியா) அமரர் திரு வடிவேல் பரமகுருநாதர் அவர்களின் அந்தியேட்டிக் கிரியை 19-03-94 2ஆம் கட்டை, வேப்பங்குளம் வவுனியாவிலுள்ள இவரது மகளின் இல்லத்தில் நடைபெறும். இதில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்னாரின் ஆத்மசாந்திக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்: சோ. ஜெயா, சமநலசேவைகள் திணைக்களம், கிளிநொச்சி. (7750)

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

**31ஆம் நாள் நினைவஞ்சலியும்**


**இயேசுவின் திருப்பாடுகளின் வரலாறு**

(பொம்மைக் காட்சி)

15, 16, 17 மார்ச் 1994
மாலை 6.45ம. மன்ற அரங்கு

தயாரிப்பு:
திருமறைக் கலா மன்றம்
(இ-8840)

**சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்கா**

பொம்மைவெளி,
சுன்னாகம் தெற்கு, சிறுப்பிட்டி மேற்கு

மேற்படி நிலயங்களுடன் இணைந்த வாழ்க்கைத் திறன் கல்வி நிலையங்களின் (வயதுவந்தோர்களுக்குரியது) வெற்றிடங்களுக்கு தகுதியானவர்கள் விண்ணப்பிக்கவும்.

தகைமை: ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் / அனுபவம்வாய்ந்த ஆசிரியர்கள் அந்தந்த உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

சகல ஆவணங்களுடனும் 22-03-1994 காலை 9.00 மணிக்கு கீழ்வரும் விலாசத்தில் நேரில் வரவும்.

யாழ். மாவட்டச் செயலகம்,
அரசியற்துறை, கோண்டாவில்.
(7749)


**நினைவு கூருகின்றோம்...**

**1994-03-15**

1984-ம் ஆண்டு இதேதினத்தில் முச்சலத்திவிற் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ். 2-ம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த தமிழிளைஞன்;

1988-ம் ஆண்டு திருமலை - குச்சவெளிப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**நவம்** (இரத்தினம் சுகராசா-திரியாய்-திருமலை)

**மூர்த்தி** (செல்லையா ஜீவராசா-திரியாய்-திருமலை)

திருமலை - தம்பலகாமம் பகுதியில் இந்தியப்படையினரால் பேருந்திலிருந்து இறக்கப்பட்டு அடித்துக் கொல்லப்பட்ட 03 தமிழ் பயணிகள்,

கிளிநொச்சியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட விகந்தபுரம், இல: 307 ஐச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

1989-ம் ஆண்டு திருமலை, சேனையூர்ப் பகுதியில் தேசவிரோத சக்திகளுடனான சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப்.காமன்** (நாகலிங்கம் கதிர்காமத்தம்பி-கிளிவெட்டி, மூதூர்-திருமலை)

**ஜெயா** (கணபதிப்பிள்ளை திருச்செல்வம்-கட்டை...

டைக்குமாறு வேண்டுகிறேன் இப்படிக்கு அ. வரதராஜா (அழகு) (7747)

## கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

கைலைன் பிறவுண் Hy - LINE BROWN பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. ''மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (7687)

## விபரம் தர பணிப்பு

பாடசாலைகளுக்கு ஒப்பந்தக்காரர்கள் மூலம் உபகரணங்கள், தளபாடங்கள் வழங்கப்படும்போது ஒப்பந்தக்காரர்களுக்கும், அதிபர்களுக்கும் பொருட்களுக்கான பட்டியல் சம்பந்தப்பட்ட கல்வித் திணைக்களக் கணக்காளரால் வழங்கப்படுவது அவசியம். அப்படி வழங்கினால் தான் பெறப்படவுள்ள பொருட்களின் தரம், அளவுபற்றி அவர்கள் அளவிட முடியும் என வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சகல மாவட்ட மாகாண கல்வித் திணைக்களங்களுக்குச் கோட்டக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பி வைத்துள்ள சுடிதத்தில் தெரிவித்துள்ளார். (17)

## கூட்டில் மாற்றமில்லை

(சென்னை)

இடதுசாரி கட்சிகளுடனான தேர்தல் கூட்டு தொடரும் என தி. மு. க. தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார். தேர்தல் தொடர்பான முன்னைய தீர்மானம் பற்றி மீள்பரிசீலனை செய்ய வேண்டியிருப்பதாக மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி கூறியிருப்பது பற்றி கருணாநிதியை கேட்ட போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

குண்ட சகிதம் (09) 1008 அஷ்டோத்திர சகஸ்ர சங்காபிஷேகம் பிரதம குரு கிரியாதத்துவநிதி, கிரியாகமணி சிவஸ்ரீ ச. சோமாஸ்கந்தக் குருக்கள் தலைமையில் ஒன்பது குருக்களால் நடாத்தப்படவுள்ளது (24)

ஃ ஃ

ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் புனர்வாழ்வு திட்டத்தின் கீழ் அறவழிப் போராட்டக் குழுவினால் இடம் பெயர்ந்தோர் முகாமிலுள்ள குடும்பங்களுக்கு லாம்புகள் வழங்கும் வைபவம் இன்று பி. ப. 3-30 மணிக்கு அறவழிப் பயிலகத்தில் நடைபெறவுள்ளது.

இவ் வைபவத்தில் வை.எம். சீ. ஏ. தலைவர் வைத்திய கலாநிதி து. வி. ஜெயகுலராஜா பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக டாக்டர், பே. பிலிப்ஸ் தென்மராட்சி பிரதேச செயலர் திரு. பூ. சுந்தரம்பிள்ளை, திரு. த. நவரத்தினராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஃ ஃ

(குருநகர்)

சிறுவர்களுக்கான திருப்பாடுகளின் காட்சி (பொம்மைக் காட்சி) தவக்காலத்தையொட்டி யாழ். பிரதான வீதி திருமறைக் கலாமன்றக் கலை அரங்கில் தொடர்ந்து இன்றுமுதல் மூன்று தினங்கள் நடைபெற இருக்கிறது. (21)

ஃ ஃ

யாழ்ப்பாண மத்திய கல்லூரியின் 175ஆவது ஆண்டு நிறைவு விழாவும், மத்தியம் சிறப்பு மலர் வெளியீடும் இன்று கல்லூரி அதிபர் தலைமையில் கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் பிற்பகல் 12-30 மணியளவில் நடைபெறவுள்ளது.

...ளத்தில் இடம்பெறவுள்ளதாக பல்கலைக்கழக அணித் தலைவர் எஸ். நோபிள் சுரேந்திரன் தெரிவித்துள்ளார். (5

ஃ ஃ

இராமகிருஷ்ணாலய மாணவிகள் வழங்கும் சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கைக் காவியத்தை விளக்கும் வீரத் துறவி வில்லிசை நிகழ்ச்சி இன்று பி. ப. 4-00 மணியளவில் கொக்குவில் இராமகிருஷ்ணா வித்தியாலயத்தின் அனுசரணையுடன் கொக்குவில் வளர்மதி சனசமூக நிலைய அரங்கில் நடைபெறவுள்ளது

ஃ ஃ

(குருநகர்)

யாழ் புனித மரியாள் வித்தியாலய மாணவர் நவன் புரிச் சங்க நிதிக்காக இன்று மாலை 6..30 மணிக்கு திருமெற்றாஸ்மயில் நெறியாள்கையிலான காத்தவராயன் நாடகம் மேடையேறும்.

வித்தியாலய அதிபர் திரு க. தார்சீசியஸ் தலைமையில் நடைபெறும் நிகழ்ச்சியில் முதன்மை விருந்தினராக யாழ். பிரதேச செயலர் கலாநிதி க.குணராசாவும், சிறப்பு விருந்தினராக கலை பண்பாட்டுக் கழக மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி எஸ், கலைமணியும் கலந்து கொள்வர். (21)

ஃ ஃ

யாழ். புனிதர் சாள்ஸ் மகா வித்தியாலய ஆரம்ப பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய் பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபரின் தலைமையில் நடைபெறும்

## நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



### அமரர் திருமதி சரஸ்வதி அருணாசலம்

தோற்றம்: 06 - 01 - 1929

மறைவு: 13 - 02 - 1994

எங்கள் உயிரே எங்கள் அம்மா
அப்பாவும் அம்மாவுமாக எம்மை ஆதரித்த தெய்வமே
ஒன்றென்ன ஓராயிரம் மாதம் சென்றாலும்
அகலாது உங்கள் நினைவு எம் நெஞ்சை விட்டு
அன்பான மனமும் பண்பான பழக்கமும்
மனமாரச் செய்யும் செயலும்
ஓய்வு என்றிருக்காமல் தேவை என்றால்
தேடி ஓடிவந்து செய்யும் சிறப்பான செயலும்
மாதம் ஒன்று சென்றும் மறையவில்லையம்மா
கனவிலும் நனவிலும் காணுமிடமெங்கும்
கண்ணிலும் கருத்திலும் நிறைந்திருக்குமெங்கள் அம்மா
இன்னும் சில காலம் வாழ்ந்திருக்க கூடாதா
காலனவன் கண்பட்டு கடுகதியாய் சென்றதென்ன
எம்மிறைவன் சிவன் பாதத்தில்
ஆனந்தமாய் அமர்ந்திருக்க
அனுதினம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று செவ்வாய்க்கிழமை (15-3-94) எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி.

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
உசன், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
மிடத்தற்பனை, மிருசுவில். (7746)

தய,

**2-ம் லெப்.காமன்** (நாகலிங்கம் சதிர்காமத்தம்பி- கிளிவெட்டி, மூதூர்-திருமலை)

**ஜெயா** (கணபதிப்பிள்ளை திருச்செல்வம்-கட்டைபறிச்சான்-மூதூர்-திருமலை)

மணலாறு-அளம்பில் பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். விக்ரம்** (கிருஷ்ணபிள்ளை சவுந்தரபிள்ளை-கள்ளப்பாடு-முல்லைத்தீவு)

**ரமேஸ்** (ஆறுமுகம் பாலநாதன்-குமுழமுனை - மணலாறு)

மட்டு-கோட்டைக்கல்லாறுப் பகுதியில் இந்தியப் படையினரால் கைதுசெய்யப்பட்டு பின்னர் களுவாஞ்சிக்குடி காவல் நிலையத்தில் சடலமாக ஒப்படைக்கப்பட்ட கோட்டைக்கல்லாற்றைச் சேர்ந்த பேராதனைப் பல்கலைக்கழக வைத்திய பீட 2-ம் ஆண்டு தமிழ் மாணவன்.

மன்னாரில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

1991-ம் ஆண்டு ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் விழுப்புண் அடைந்திருந்து யாழ்-மருத்துவமனையில் வீரச்சாவெய்திய,

**அனஸ்** (ஆறுமுகம் ஜெகானந்தராசா-புளியம் பொக்கணை-பரந்தன்)

மட்டு-தலவாய்ப் பகுதியில் இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

1992-ம் ஆண்டு மட்டு - பாலையடி வெட்டைப் பகுதியை முற்றுகையிட முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருக்கு எதிரான தாக்குதலில் வீரச்சாவெய்திய

**2-ம் லெப்.வேணு-வேணுசங்கர்** (சிவலிங்கம் சுந்தரமூர்த்தி - முதலைக்குடா-மட்டு)

மன்னார்-பேசாலை வீதியில் சுற்றிவளைத்த இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1993-ம் ஆண்டு யாழ்-அளவெட்டிப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய

**லெப்.நாயகி-மங்கயற்கரசி** (இராசலஷ்சுமி வீரமலை-புதுமுறிப்பு-கிளிநொச்சி)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-8834)

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# ஐ. தே. க. அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

## எதிரணிகள் அறிவிப்பு

(கொழும்பு)

கொழுந்து விட்டெரிந்து கொண்டிருக்கும் தேசியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத் தவறியிருப்பதுடன், நாட்டின் நிதி நெருக்கடிபற்றி சிஞ்சித்தேனும் அக்கறையின்றி பொதுநிதி விரயமாக்கப்படுவதுடன் மக்களின் நெடுநாளையத் துயரங்களுக்கு நிவாரணம் வழங்க ஐ. தே. க. அரசு தவறிப் போயுள்ளது எனக் குற்றம் சாட்டி ஐ. தே. க. அரசின்மீது எதிர்க்கட்சிகளால் நம்பிக்கையில்லாப் பிரேரணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

திகதி குறிப்பிடப்படாத பிரேரணையாக பாராளுமன்ற ஒழுங்குப் புத்தகத்திற்கான அனுபந்தத்தில் இடம்பெற்றுள்ள இப்பிரேரணையில் எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கவும், பாராளுமன்ற உறுப்பினர்களான தினேஷ் குணவர்த்தன, அநுரா பண்டாரநாயக்க... வு. செனிவிரத்ன, கே. நவரத்தினம், லக்ஷ்மன் ஜெயக்கொடி, பி. வி. குணரட்ண ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

பன்னிரண்டு குற்றச்சாட்டுக்கள் குறிப்பிடப்பட்டுள்ள இப்பிரேரணையில் வடக்கு-கிழக்குப் பகுதியில் சமாதானத்தைக் கொண்டுவரத் தவறியதுடன், இப்பிரச்சினை பற்றி பலதரப்பட்ட முரண்பாடுகள் கொண்ட கருத்துக்களையும் அரசாங்கம் தெரிவித்து வருவதாக முதலாவது குற்றச்சாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் வாழ்க்கைச் செலவு உயர்வு, மானியங்கள் நீக்கப்பட்டமை, அரச நிறுவனங்கள் விற்கப்பட்டமை, உயர் அதிகாரிகளின் இடமாற்றம், பிரேமதாசா உடுகம்பொல போன்றோரின் உயர் பதவிக்கான நியமனங்கள், அரசியல் படுகொலைகள், முக்கியஸ்தர்களின் கொலை தொடர்பாக பாரபட்சமற்ற விசாரணைக்குழு அமைக்கத் தவறியமை என்பன போன்ற பல்வேறு குற்றச்சாட்டுகளும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

# நாம் வாக்குரிமை பெற்றது ஐ.தே.கவை ஆதரிக்க அல்ல

## தொண்டமான் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் தான் நாம் பிரஜாவுரிமையும், வாக்குரிமையும் பெற்றோம் எனினும் இந்த உரிமையை நாம் பெற்றது ஐ.தே.கவிற்கு வாக்களிப்பதற்காக மட்டுமல்ல, என்று அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார். அண்மையில் அட்டன் அபேட்சிலி குரங்குமலைத் தோட்டத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசிய அமைச்சர் மேலும் கூறுகையில், தோட்டங்கள் எல்லாம் கிராமமாக மாற வேண்டும். தனியார் கம்பெனி தோட்டங்களை பொறுப்பேற்றிருப்பதால் ஒவ்வொருவரும் குடியிருக்கும் லயமும், காய்கறித் தோட்டமும் அவரவருக்கே சொந்தமாக்கப்படல் வேண்டும். முன்னாள் ஜனாதிபதி இதை ஏற்றுக்கொண்டு இருந்தார். மிக விரைவில் தோட்ட வீடுகளும் காய்கறி தோட்டமும் உங்களுக்கு சொந்தமாக வேண்டும். இவ்வாறு நாம் உரிமைகளை பெறுவதைப் பலர் விரும்பவில்லை தொண்டமானின் செல்வாக்கு கூடிவிடுமோ எனப் பயப்படுகிறார்கள். அதனால் தான் இ.தொ.காவினுள் சிலரைப் பிடித்து வைத்துக் கொண்டார்கள். வடக்கிலும் கிழக்கிலும் எவ்வளவோ படித்த மேதைகள் இருந்தார்கள். ஜி ஜி. சட்டம் படித்த திறமைசாலி, தந்தை செல்வா ஈழத்துக் காந்தி எனப் பெயர் பெற்றவர். ஆனால் அவர்களால் செய்ய முடியாததை பிரபாகரன் செய்கிறார். அரசை எதிர்த்து சரிசமமாக நின்று போராடுகிறார்.

நாம் அரசில் அமைச்சர்களாகவும் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் மாகாண சபையிலும் பிரதேச சபையிலும் இடம் பிடித்துவிட்டோம் இப்படியே இவர்களை விட்டால் பெரும் ஆபத்து என நினைப்பவர்கள் எம்மைப் பலவீனப்படுத்தப் பார்க்கின்றனர் எனவும் தெரிவித்தார்.

தென் மாகாண

# தேர்தல்பிரசாரகூட்டங்களில் திருமதி சிறிமானி உரை

(கொழும்பு)

தென் மாகாண சபையின் வேட்பாளர்களாகப் பொதுசன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து போட்டியிடும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினரை ஆதரித்து திருமதி சிறிமானி அத்துலத்முதலி காலி மாவட்டத்தில் மட்டும் ஆறு பொதுக் கூட்டங்களில் கலந்து கொண்டுள்ளார்.

இவர் மேலும் பல பொதுக் கூட்டங்களில் உரையாற்றுவதன் மூலம் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் வேட்பாளர்களுக்கு ஆதரவு தேட இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# காயப்படுத்தியவர்களுக்கு நீதிமன்றம் அபராதம் விதிப்பு

(பருத்தித்துறை)

இருவர் சேர்ந்து ஒருவருக்கு வேண்டுமென்றே கையால் அடித்துக் காயப்படுத்தினார்கள் என தமிழீழ காவல் துறையினரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் பருத்தித்துறை தமிழீழ நீதிமன்றம் எதிரிகள் இருவருக்கும் தலா 500- ரூபா அபராதம் விதித்ததுடன் காயப்பட்டவருக்கு இழப்பீடாக 1,000 ரூபா செலுத்தும்படியும் உத்தரவிட்டது.

கற்கோவளம் புனித நகரைச் சேர்ந்த கந்தையா கற்கோவளத்தைச் சேர்ந்த நாகலிங்கம்பாலசூரியமூர்த்தி, இலங்கைநாயகம் தவராஜா ஆகிய இருவரும் வேண்டுமென்று கையால் அடித்துக் காயம் ஏற்படுத்தினார்கள் என பருத்தித்துறை தமிழீழ காவல்துறையால் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் தமிழீழ நீதியாளர் திரு. மயூரன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டபோதே தலா 500 ரூபா அபராதமும் இழப்பீடு 1,000 ரூபாவும் விதிக்கப்பட்

# வெங்காயம் திருடியவர்கள் அபராதம் விதிக்கப்பட்டனர்

(பருத்தித்துறை)

தோட்டத்திற்குள் வைக்கப்பட்டிருந்த வெங்காயத்தைத் திருடிய இரு வெங்காயத்திருடர்களையும் கடுமையாக எச்சரித்த பருத்தித்துறை தமிழீழ நீதிமன்றம் எதிரிகளுக்குத் தலா 500 ரூபா அபராதமும் விதித்தது.

மகாலிங்கசிவம் பிரதீபன் ஆகிய இருவரும் திருடினார்கள் எனக் குற்றஞ்சாட்டிப் பருத்தித்துறை தமிழீழகாவல் துறையினர் பருத்தித்துறை தமிழீழ நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்திருந்தனர். இவ்வழக்கு விசாரணை தமிழீழ நீதியாளர் செல்வி பிர

# வடக்கிற்கு உணவுப்பொருள் அனுப்ப புதியநடைமுறை இன்று முதல் அமுல்

(கொழும்பு)

வடக்கிற்கு உணவுப் பொருட்களை கொண்டு செல்ல புதிய நடைமுறை ஒன்று அமுலுக்கு வரவுள்ளது. எதிர்வரும் 16-ம் திகதி முதல் இது நடைமுறையாகும். இதற்கான ஏற்பாடுகளை வவுனியா அரச அதிபர் செய்துள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்புதிய நடைமுறையின்படி வவுனியா கதிரேசு வீதியில் அமைந்துள்ள கூட்டுறவு மொத்த விற்பனவுக் களஞ்சியத்தில் இருந்து பொருள்களை வட பகுதியில் இராணுவக் கட்டுப்பாடு இல்லாத பகுதிகளில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களும் தனியார் வர்த்தகர்களும் பெற்றுக் கொள்ள முடியும் என வவுனியா அரச அதிபர் குறிப்பிட்டார்.

இந்த வவுனியா கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையத்திற்கு பொருள்கள் ரயில்வண்டிகள் மூலம் கொண்டு வரப்பட்டு இந்தக் களஞ்சியத்தில் சேமித்து வைக்கப்படும். இந்தக் களஞ்சியத்திலிருந்து பொருள்களை படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்கு எடுத்துச் செல்லும் லொறிகள் எதுவித சோதனைக்கும் உள்ளாக்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருள்கள் ஏற்றப்படும் போது படையினரின் முன்னிலையிலேயே ஏற்றப்படும் எனவும் பின்னர் இந்த லொறிகளில் வடக்கே செல்லும் லொறிகள் தாண்டிக்குளம் வரையிலும் மன்னார் செல்லும் லொறிகள் பம்பைமடு வரையிலும் இராணுவப் பாதுகாப்புடன் கொண்டு செல்லப்பட்டு அப்பால் செல்ல அனுமதிக்கப்படும் எனவும் அதிகாரிஒருவர் தெரிவித்துள்ளார்.

இதுவரை கொழும்பிலிருந்தும் அநுராதபுரத்தில் இருந்துமே வடபகுதிக்கு பொருள்கள் தரைவழியாக எடுத்துச் செல்லப்பட்டன. இதை தவிர்க்கவே இப்புதியநடைமுறை என வவுனியா அரச அதிபர் கூறினார்.

இப்புதிய திட்டம் தொடர்பாக முதலாவது தொகுதி உணவுப் பொருள்கள் எதிர்வரும் 16 ஆம் 17ஆம் திகதிகளில் வவுனியாவிலிருந்து புறப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மாகாணசபையை எதிர்த்த சு.கட்சிபோட்டியிடுவது ஏன்?

## ஒஸி அபயகுணசேகரா

(கொழும்பு)

சுதந்திரக்கட்சி அன்று மாகாணசபைகளை எதிர்த்தது. ஏழு மாகாண சபை அமைக்கப்பட்டால் நாடு ஏழு துண்டுகளாகும்என்று கூச்சல் போட்டது. இவ்வாறு சிறிலங்கா மக்கள் கட்சியின் தலைவரான ஒஸி அபயகுணசேகரா தெரிவித்தார்.

தென் மாகாணசபைக்கான ஐ தே கவின் தேர்தல் பிரசாரக் கூட்டம் கெகனந்துறையில் இடம்பெற்ற போது அதில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், அத்தகைய சுதந்திரக் கட்சியினர் தான் இன்று மாகாண சபைகளுக்காக போட்டியிடுகின்றனர். வெட்கம் இருந்தால் அவர்கள் இவ்வாறு இரட்டை வேடம் போடமாட்டார்கள் என்று தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் உரையாற்றிய அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க தமது உரையில் தென் மாகாணஆட்சி அதிகாரம் பிரான்சிஸ் குணவர்தனவிடம் சென்றுவிட்டதால் தான் ஒழிந்து போய்விட்டதாக என் மீது குற்றம் கூறுகின்றனர். இது பொய்யாகும் அவரது தந்தை என்னால் தான் சுதந்திரக்கட்சியில்சேர்ந்தார் பிரான்சிஸ்குவும்எனக்காகவே சுதந்திரக்கட்சியில் சேர்ந்து போட்டியிட்டார். நான் ஐ தே. கவில் சேர்ந்ததும், என்னை சந்தித்தார். பின்னர் அவரும் ஐ தே. கவில் சேர்ந்து கொண்டார். எனத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் விஜயவர்த்தன, முன்னாள் நிதி அமைச்சர் ரொனி. டி மெல், ராஜித சேனாரத்ன, சானக அமரதுங்க உட்படப் பலரும் உரையாற்றினார்கள்.

வாக்குப் பெட்டிகளை

# கடத்தினால் பறித்தெடுப்போம் அடித்தால் திருப்பி அடிப்போம்

## திருமதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

எம்மை அடித்தால் நாமும் திருப்பி அடிப்போம் வாக்குப் பெட்டிகள் கடத்தப்பட்டால் அவற்றைப் பறித்தெடுப்போம் நாங்களும் சகல விதமான ஆயுதங்களுடனும் தான் தேர்தலுக்கு முகம் கொடுத்துள்ளோம். இவ்வாறு மேல் மாகாண முதல்வர் திருமதி சந்திரிகா குமா

செய்கையின் பின்பும் விவசாயிகள் கடன்காரர்களாகி வருகின்றனர். இதனை நன்கு சிந்தித்த ஐ தே. கட்சியை சேர்ந்த புத்திசாலிகள் இப்போது சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்து வருகின்றனர் எனவும் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் பேசிய முன்னாள் முதல்வர் அமரசிறி தொடங்கொட தமது உரையின் போது கொழும்பில் தமது அதிகாரத்தை பறிகொடுத்த ஐ. தே. க. தெற்கின் அதிகாரத்தையேனும் கைப்பற்றப் பாடுபடுகிறது. இதுவும் பகற்கனவாகவே முடியும் எனத் தெரிவித்தார்.

எதிரிகளுக்குத் தலா 500 ரூபா அபராதமும் விதித்தது.

பருத்தித்துறை வியாபாரி மூலையைச் சேர்ந்த மகா கணபதி சிவானந்தக் குருக்கள் என்பவர் தோட்டத்திற்குள் வைத்திருந்த வெங்காயத்தை வியாபாரி மூலையைச் சேர்ந்த எலிசபெத் அன்ரனி, இவ்வழக்கு விசாரணை தமிழீழ நீதியாளர் செல்வி பிரதீபா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது. நீதியாளர் வெங்காயத்திருடர் களைக் கடுமையாக எச்சரித்து தலா 500 ரூபா அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார். (25)

# சிறிலங்கா பிரேதப்பெட்டி பிரான்சுக்கு ஏற்றுமதி?

(கொழும்பு)

பிரான்சில் உள்ள அந்திய கால சேவை அமைப்பு ஒன்று தமக்கு பிரேதப்பெட்டிகளை இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யவுள்ளது. தமக்கு ஒருதொகுதி பிரேதப்பெட்டிகளை அனுப்பி வைக்குமாறு அந்நிறுவனம் இலங்கையில் உள்ள பிரேதப்பெட்டி நிறுவனம் ஒன்றிற்கு கொள்வனவுக் கட்டளையை அனுப்பியுள்ளது.

பிரான்சுக்கு ஏற்றுமதியாகவுள்ள இந்த அழகுவேலைப்பாடுகள் நிறைந்த தரம் அதிகமான பிரேதப்பெட்டிகள் பிரெஞ்சு இலட்சாதிபதிகளுக்கும் பெரும் புள்ளிகளுக்குமே வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான பிரேதப்பெட்டி ஏற்றுமதி அதிகரிக்குமானால் நாம் ரிம்பர் ஓக் போன்ற தரமான மரங்களை இறக்குமதி செய்து தரமான பிரேதப்பெட்டிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியும் எனகொழும்பிலுள்ள ஏற்றுமதி வட்டாரங்கள் தெரிவித்தன. வேலை வாய்ப்பும் இதன் மூலம் அதிகரிக்கும் எனவும் உள்ளூர் உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

# மருந்து விநியோகம் தனியார் வசமாகும்

(கொழும்பு)

இலங்கை மருந்துக் கூட்டுத்தாபனம் தனியார் மயப்படுத்தப்படவுள்ளதாக தெரியவருகின்றது. இவ்வாறு தனியார் மயமாக்கப்படுமானால் மருந்துப் பொருள்களின் விநியோகம் முழுமையாக தனியார் மயப்படுத்தப்படும் என தெரியவருகின்றது.

மருந்துக் கூட்டுத்தாபனம் தனியார் மயமாக்கப்பட்டால் மருந்து பொருள்களின் விலை உச்ச நிலையடையும் எனவும் இதனால் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் எனவும் மருத்துவ வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

## விறகுகள் ஏலத்தில் விற்பனை

(வடமராட்சி)

பருத்தித்துறை நீதிமன்றில் கடந்த 5 ஆம் திகதி இரண்டு குவியல் விறகுகள் 5450 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது. இவ் விறகுகள் சான்றுப் பொருளாக கொண்டு வரப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டவையென நீதிமன்ற பதிவாளர் தெரிவித்தார். (யோ)

யும் உத்தரவிட்டது.

கற்கோவளம் புனித நகரைச் சேர்ந்த கந்தையா மகேஸ்வரன் என்பவருக்கு ரூபா அபராதமும் இழப்பீடு 1,000 ரூபாவும் விதிக்கப்பட்டது. (25)

# தமிழர்களின் வாழ்வுரிமை சிங்களவர் ஏற்கவேண்டும்

## பி. பி. சிக்கு நேயர் கடிதம்

(கொழும்பு)

தமிழர்கள் தமது பகுதியில் வாழ்வதற்கு பூரண உரிமையுண்டு இதனைப்புரிந்து கொள்ளாத அல்லது ஏற்க முடியாத நிலையிலதான் எமது அரசியல்வாதிகள் இருக்கின்றனர் இவ்வாறு பி பி சியின் சிங்கள மொழிச் சேவையான சந்தேசியவிற்கு வானொலி நேயர் ஒருவர் எழுதிய கடிதமொன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவிக்கையில் இந்த நிலைமையை எமது அரசியல்வாதிகள் புரிந்து கொள்ளாத வரையில் இப் பிரச்சினைக்கு தீர்வு எதையும் காண முடியாது எனவும், சமாதான பேச்சுக்கள் நடத்துவதற்கு முன்னர் இந்த நிலையை அவர்கள் தெளிவாக உணர வேண்டும் என ம் வலியுறுத்தியுள்ளார்.

# உடல்உள வளர்ச்சிக்கு விளையாட்டு உகந்தது

## - கல்விப்பணிப்பாளர்

(வடமராட்சி)

உடல் வளர்ச்சியையும், உள வளர்ச்சியையும் ஒருங்கே வளர்க்கிறது இந்த விளையாட்டுப் போட்டி.

இவ்வாறு பருத்தித்துறை பெண்கள் உயர்தரக் கல்லூரியில் கடந்த சனிக்கிழமை அதிபர் திருமதி நந்தகுமார் தலைமையில் நடைபெற்ற மெய்வன்மைப் போட்டியில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட கல்வி வலயம் II கல்விப்பணிப்பாளர் திரு க. கந்தசாமி தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது இங்கு நடைபெற்ற விளையாட்டுக்கள் அனைத்தும் மிகவும் கவர்ச்சியானது அதனைப்பார்க்க எமக்குகாட்சியாக இருந்தது. பாடசாலை நேரம்தவிர்ந்த மற்றைய நேரங்களை விளையாட்டுக்காக பயன்படுத்தி தங்கள் திறமைகளை வளர்த்திருக்கின்றனர் இதனை பார்க்கும் போது ஆனந்தமாக இருக்கிறது உச்சி வெய்யிலையும் பொருட்படுத்தாமல் இன்று நடைபெற்ற விளையாட்டுக்கள் நல்ல பயிற்சியைக் கொண்டுள்ளன.

விளையாட்டு உடலுக்கு ஆரோக்கியத்தை ஏற்படுத்துகிறது இக்கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், செயலர் எல்லோரும் இந்த விளையாட்டுக்கு பூரண ஆதரவு கொடுத்திருப்பது பாராட்டுக்குரியது இந்த நிகழ்ச்சி அனுபவங்கள் காசு கொடுத்து வாங்க முடியாதது என்றார்.

மற்றும் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசில்களையும் வழங்கினர். (யோ)

கொழுத்துள்ளோம். இவ்வாறு மேல் மாகாண முதல்வர் திருமதி சந்திரிகா குமாரணதுங்க கூறியுள்ளார்.

கஹதுவ சந்தியில் நடைபெற்ற பொதுசன ஐக்கிய முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிடுகையில் தென் மாகாண மக்கள் பெற்றிருந்த பெரும் வெற்றியை இந்த அரசாங்கம் சதி செய்து பறித்தெடுத்தது. அதனால்தான் இங்கு மீண்டும் ஒரு தேர்தல் நடைபெறுகிறது. ஒரு வகையில் இது தென் மாகாண மக்களுக்கு கிடைத்த வெற்றியாகும். இன்று விவசாயம் நாசமாகி விட்டது ஒவ்வொரு போக

# விவசாயிகளுக்கு பரிசில்கள் உ.வ.அ. மன்றம் வழங்கியது

(மானிப்பாய்)

நெற்பயிர்ச் செய்கைக்கான உதவிவழங்கப்பட்டு அவற்றை சரியான முறையில் பயன்படுத்தி சிறந்தமுறையில் நெற்பயிர்ச் செய்கையை மேற்கொண்டதற்காக விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு நேற்று காலை பத்துமணியளவில் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் பரிசில்கள் வழங்கப்பட்டு அவர்கள் கௌரவிக்கப்பட்டனர்

யாழ் மாவட்ட உலர்வலய அபிவிருத்தி மன்றத்தினால் 1993 1994-ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைந்த விவசாய உதவித்திட்டத்தின் கீழ விவசாயிகளை ஊக்குவிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அதன் ஒரு கட்டமாகவே சிறந்த நெற்பயிர்ச்செய்கையாளருக்கான பரிசளிப்பு விழா நடைபெற்றது. (07)

# சாட்சி நீதிமன்று வராவிடின் எதிரி விடுவிக்கப்படுவார்

## - நீதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

வழக்கு தொடுக்கப்பட்டு பதினொரு மாத காலமான பின்பும், குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நீதிமன்றுக்கு வரவில்லை அடுத்த தவணையும் சாட்சி வரவில்லையானால் எதிரி விடுவிக்கப்படுவார் என்று நீதிபதி எச்சரிக்கை விடுத்தார்.

றீட் இங்ஸ்லி நேசராசா என்ற வாலிபருக்கு எதிரான வழக்கு கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி தர்மதாச ஜெயவிக்கிரம முன்னிலையில் ஆறாவது தடவையாக விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது நீதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

எதிரி தரப்பு சட்டத்தரணி முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டிய இவ் வழக்கில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் வராததால் தமது கட்சிக்காரர் சிறையில் வாட நேரிடுவதாக சுட்டிக் காட்டினார். இதைத் தொடர்ந்தே அடுத்த தவணை பொலீஸ் அதிகாரி நீதிமன்றிற்கு வராது விட்டால் தமக்குள்ள அதிகாரத்தின் கீழ் எதிரியை விடுதலை செய்துவிடப் போவதாக நீதிபதி தெரிவித்தார்.

---

## பாடசாலை தளபாடம் திருடப்பட்டுள்ளது

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மாதனை மெதடிஸ் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் பாடசாலையின் தளபாடங்கள் திருடப்பட்டுள்ளதாக புகார் செய்யப்பட்டுள்ளது. பாடசாலை அதிபர்பருத்தித்துறை தமிழீழ காவல் துறையில் செய்துள்ள இப்பாடசாலைத் தளபாடங்கள் திருட்டுச் சம்பவம் தொடர்பாக காவல் துறையினர்விசாரணைசெய்து வருகின்றனர். (25)

---

## சைக்கிள் திருட்டு பிடிபட்டது

(வடமராட்சி)

பருத்தித்துறை காவல்துறையினரின் துரித வேட்டையால் சைக்கிள் திருடன் ஒருவர் திருடிய சைக்கிளுடன் கையும் மெய்யுமாக பிடிபட்டார்.

புலோலி குரும்பசிட்டியைச் சேர்ந்த சரவணபவானந்தம் மாலினி என்பவரின் 5040 ரூபா பெறுமதி வாய்ந்த சைக்கிளை திருடியவர் என்ற குற்றச்சாட்டின் பேரில் அச்சுவேலியைச்சேர்ந்த கந்தையா தங்கராசா என்பவர் பருத்தித்துறை காவல்துறையினரால் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பேரில் அவருக்கு இரண்டாயிரம் ரூபா அபராதமும் விதித்து சான்றுப் பொருளான சைக்கிளை முறைப்பாட்டுக் காரராகிய மாலினிக்கு வழங்குமாறும் நீதியாளர் தீர்ப்புவழங்கினர்.

(யோ) (25)

# என்னை துரோகி என்போரை நான் பாராட்டுகிறேன்

- மு. கருணாநிதி

(சென்னை)

என்னை தமிழினத்துரோகி எனச் சிலர் கூறுகின்றனர். அவர்களை நான் பாராட்டுகிறேன். தமிழ்த் தாயின் மகனாக பிறந்த கருணாநிதி தமிழினத் துரோகியா? தமிழ் மொழிக்காக பாளை சிறைச் சாலையில் பல்லிகள், பூரான்கள் நடுவே காலங்கடத்தியவனே என்று தி.மு.க. தலைவரும் முன்னாள் முதல்வருமான மு. கருணாநிதி தெரிவித்தார்.

திருக்கோவிலூரில் நடைபெற்ற தி.மு.க. பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், தி.மு.க. உள்ளதா? என சிலர் கேள்வி எழுப்பியுள்ளனர். தி.மு.க வை அழித்து விடலாம் என்று எண்ணி செயல்பட்டு வருகின்றனர். தி.மு.க. வை அழிக்க யார் பிறந்துள்ளார்கள் இனியும் எவரும் பிறக்கப்போவதில்லை ஏனெனில் தி.மு.க. தொண்டர்கள் பெரியார், அண்ணாதுரை போன்றோரின் கொள்கையில் வளர்ந்தவர்கள் தி.மு.க. என்ற ஆலமரத்திற்கு அண்ணாதுரையின் கருத்துக்கள் உரமாகவும் தொண்டர்கள் வேலியாகவும் உள்ளனர். இந்த ஆலமரத்தை யாரும் வீழ்த்த முடியாது.

தி.மு.க. வுக்கு ஆதரவு இல்லையெனக்கூறி அழித்து விடலாம் எனச் சிலர் நினைக்கிறார்கள். நேற்று பெய்த மழையில் முளைத்த காளான்களால் தி.மு.க. வை ஒன்றும் செய்து விட முடியாது.

பதினாறு வயதிலேயே திருவாரூரில் புலி, வில், கயல் பொறித்த கொடியை ஏந்தி இந்தியை எதிர்த்தேன். 56 ஆண்டுகள் பொது வாழ்வில் ஈடுபட்டவன் இந்தக் கருணாநிதி. தி.மு.க. வின் கொடிக்கு யார் வேண்டுமானாலும் சொந்தம் கொண்டாடலாம். கொடிக்கு தான் சொந்தம் கொண்டாடுவோர் அவர்கள் இந்தக் கொடிக்காக நாங்கள் பட்ட அவமானம் தாங்கிய ஏச்சுக்கள் அதன் வெளிப்பாடு தான் இந்தக் கொடி எனக் குறிப்பிட்டார்.

# அ.தி.மு.க வுடன் கூட்டணி தற்கொலைக்கு சமனானது

காங்கிரஸ் தலைவர்கள் கூற்று

(சென்னை)

ஜெயலலிதா அ.தி.மு.க.வுடன் கூட்டுச் சேர்வது தமிழகத்தில் காங்கிரஸ் தலைவர்கள் தற்கொலை செய்து கொள்வதற்கு சமமானதாகும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய சூழ்நிலையில் காங்கிரசுக் கட்சி அ.இ.அ.தி.மு.க. வுடன் எத்தகைய கூட்டணிக்கும் செல்லக் கூடாது எனவும் அவர்கள் பிரதமரும் கட்சியின் தலைவருமான பி.வி. நரசிம்மராவுக்கு சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும் முதலமைச்சருக்கு எதிராக சுமத்தப்பட்டு வரும் பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகளில் இருந்தும் தப்புவதற்காகவே முதல்வர் காங்கிரசுடன் கூட்டுச் சேர்வதற்கு முயல்வதாகவும் இவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# ஜெயலலிதா செல்வாக்கு வேகமாக சரிவடைகிறது

- முன்னாள் அமைச்சர் இராசாராம்

(சென்னை)

முதல்வர் ஜெயலலிதாவின் தொண்டுக்கு நோபல்பரிசு கொடுக்கவேண்டும் என்று தமிழக அமைச்சர் ஒருவர் கூறியிருக்கிறார். இதுதான் இந்த ஆண்டின் மிகச்சிறந்த நகைச்சுவையாக இருக்கமுடியும் என்று முன்னாள் அமைச்சரும் முன்னாள் சட்டப் பேரவை தலைவருமான க. இராசாராம் கூறியுள்ளார்.

சென்னையில் அண்மையில் அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில் ஜெயலலிதாவின் பிறந்த விழா என்றபெயரில் நடக்கும் ஆர்ப்பாட்ட அரசியலைக் கண்டு மக்கள் திகைத்துப் போயுள்ளனர் இலாக்காகளில் உள்ள பணம் இப்படி விளம்பரத்திற்காக வாரி இறைக்கப்பட்டவரலாறு இந்திய துணைக்கண்டத்தில் எந்த மாநிலத்திலும் இல்லை. கடந்த பத்து நாட்களில் நிறைய கிராமங்களுக்கு சென்று ஏராளமான அளவில் பல தரப்பட்ட மக்களையும் சந்தித்தேன். கிராம மக்களின் மத்தியில் முதல்வர் ஜெயலலிதாவின் செல்வாக்கு வெகுவேகமாக சரிந்து வருவதைக்காண முடிகிறது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# ஆளுநராக அரசியல்வாதி நியமனம் கூடாது

சி. சுப்பிரமணியம்

(சென்னை)

அரசியல் தொடர்பு இருப்பவர்களை மாநில ஆளுநர்களாக நியமிக்கக் கூடாது என்று மாநாட்டில் மாநில முன்னாள் ஆளுநர் சி. சுப்பிரமணியம் கூறியுள்ளார்.

இவர் எழுதிய என் வாழ்க்கை நினைவுகள் என்ற நூலின் வெளியீட்டு விழா அண்மையில் சென்னையில் இடம் பெற்றது, இந்தியக்குடியரசின் முன்னாள் தலைவர் ஆர். வெங்கட்ராமன் புத்தகத்தை வெளியிட்டு வைத்தார். இவ் விழாவில் பேசிய திரு சுப்பிரமணியம் மேலும் கூறுகையில், மாநில ஆளுநர்களின் நியமனம் தொடர்பாக மத்திய அரசாங்கம் சில விதிமுறைகளை வகுத்துக் கொள்ள வேண்டும் ஆளுநர்களை குடியரசுத்தலைவர் நியமித்த போதும் அவர்கள் மத்திய அரசின் ஊழியர்கள் அல்ல. என்றார்.

# ஜெயலலிதாவின் ஆட்சி மாநிலத்திற்கே அவமானம்

- காளிமுத்து

(சென்னை)

முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு சேலை வாங்குவதற்காக மத்திய அமைச்சர் ஒருவர் கடைத்தெருவில் அலைந்து திரிந்து இருக்கிறார். தமிழ்நாடு அந்த அளவுக்கு கேவலப்பட்டுப் போய் இருக்கிறது. இவ்வாறு தமிழக முன்னாள் அமைச்சரும் தி.மு.க. இலக்கிய அணிச் செயலாளருமான கா. காளிமுத்து தெரிவித்தார்.

நெய்வேலியில் அண்மையில் நடைபெற்றதி.மு.க. பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், அண்மையில் இங்கே ஓர் அடிக்கல் நாட்டு விழா இடம் பெற்றது. ஏற்கனவே அடிக்கல் நாட்டப்பட்ட ஒரு திட்டத்திற்குச் சுட்ட பானையை மீண்டும் சூளையில் வைப்பது போல [illegible]

கடைத் தெருவில் அலைந்து ஒரு சேலையை வாங்கிக் கொண்டு வந்திருக்கிறேன். அவர் இங்கே வராத காரணத்தால் பொதுப்பணித் துறை அமைச்சரிடத்திலே இந்தச் சேலையைக் கொடுக்கிறேன். இதை அவர் ஜெயலலிதாவிடம் கொடுக்கவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டுள்ளார். ஆக பொதுப்பணித் துறை அமைச்சரின் வேலை என்ன என்று பார்த்தீர்களா?

சேலையை வாங்கிக் கொண்டு போய் ஜெயலலிதாவிடம் கொடுங்கள் என்று சொன்னதோடு மட்டுமல்ல அதற்கும் மேலாக அடுத்த தடவை நான் வரும்போது இந்தச் சேலையைக் கட்டிக் கொண்டுதான் ஜெயலலிதா எனக்கு முன் வரவேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளார். மத்திய மந்திரி கலந்து [illegible]

# எதை வேண்டுமானாலும் பேசலாம் காங்கிரசின் ஜனநாயகம் அது

பலராமன் எம்.எல்.ஏ

(சென்னை)

எதை வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் யார் வேண்டுமானாலும் பேசலாம். இதுதான் காங்கிரஸ் கட்சியின் ஜனநாயகம். ஆனால் அ.தி.மு.கவில் மந்திரிகள் கூட இன்னமும் கொத்தடிமைகளாகத் தான் இருக்கிறார்கள். இதுதான் அ.தி.மு.கவின் ஜனநாயகம். இவ்வாறு காங்கிரஸ் கட்சியின் சட்டப் பேரவை உறுப்பினர் பலராமன் தெரிவித்தார். சென்னை தேனாம்பேட்டையிலுள்ள காமராஜர் அரங்கில் காங்கிரஸ் கட்சியின் செயல் வீரர்கள் கூட்டம் இடம்பெற்றது அதில் பேசிய சட்டப் பேரவை உறுப்பினர் [illegible]

[illegible]னால் தான் காங்கிரஸ் வளரவில்லை எனக்குறிப்பிட்டார். காங்கிரஸ் ஒரு இமயமலை பறங்கி மலைக்கு பக்கத்தில் இருக்கும் பரிதாபமான மலை தான் அ.தி.மு.க என்று குறிப்பிட்டார் கலிவரதன். அவர் தொடர்ந்து பேசுகையில் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி அமைத்து காங்கிரசின் வாயை அடைக்க அ.தி.மு.க முயல்கிறது. அதற்காக தங்கபாலு போன்றோர் ஒத்துழைக்கின்றனர். மத்தியை காப்பதற்காக மாநிலத்தில் தியாகம் செய்ய முடியாது. தனித்து நின்று ஜெயிக்க வேண்டும். இல்லாவிட்டால் ஆட்சியில் பங்கு கிடைக்கும்படி கூட்டணி அமைக்க வேண்டும் எனத் தெரிவித்தார். இங்கு உரையாற்றிய வாழப்பாடி இராமமூர்த்தி கட்சியைக் காக்க வேண்டும் என்றும் சுயநலம் தான் தன்னுள் இருப்பதாகத் தெரிவித்தார்.

# மாநிலகாங்கிரஸின்போக்கு பிரதமரிடம் முறையீடு


என்றும் உங்கள் புடவைச் சேவைக்கு

**யோகா புடவை அகம்**

- சேர்ட்டிங், சூட்டிங்
- புடவைத் தினிசுகள்
- சிறுவர்களுக்கான ஆடைகள்

ஒரே இடத்தில் பெற்றிட

**யோகா புடவை அகம்**

16B, பெரியகடை, யாழ்ப்பாணம்.

குறிப்பு: இத்தாபனம் வெகுவிரைவில் இல. 32, கஸ்தூரியார் வீதி எனும் முகவரிக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளது.

(சி-8835)



**பதவி வெற்றிடங்கள்**

**உள்ளக கணக்காய்வாளர் பதவி**

பல்வேறு துறைகளில் திட்டங்களை நடைமுறைப் படுத்திவரும் ஒரு முன்னேற்றமுள்ள பிரபல நிறுவனம் ஒன்றிற்கு கணக்காய்வு செய்வதற்கு மேற்படி பதவிக்கு தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

தகைமை: 01 க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட குறைந்தது மூன்று வர்த்தகப் பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

02. கணக்குப் பதிவாளராக, அரச / கூட்டுத்தாபன / தனியார் நிறுவனங்களில் கடமை புரிந்தவர்கள் அல்லது,

03. அரசாங்க / கூட்டுத்தாபன / தனியார் சேவையில் கணக்காய்வாளராகக் கடமை புரிந்து இளைப்பாறியவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி : 25 03 -1994**

விளம்பர இலக்கம் 318

மே/பா. ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்

(சி-8837)



Y. M. C. A. JAFFNA

***VACANCY***

***POST OF SECRETARY***

எனவே அடிக்கல் நாட்டப் பட்ட ஒரு திட்டத்திற்குச் சுட்ட பாலனைய மீண்டும் சூனையில் வைப்பது போல இந்த நிகழ்ச்சி நடந்தது; அந்த விழாவில் கலந்து கொண்டு பேசிய மத்திய அமைச்சர் அஜீத் பாஞ்சா தனது உரையின் போது "முதலமைச்சர் ஜெயலலிதா வருவாரென்று ஆவலுடன் எதிர்பார்த்தேன். ஆனால், அவர் வரவில்லை; ஆனால் அவருக்காக கல்கத்தாவின் கொண்டுதான் ஜெயலலிதா எனக்கு முன் வரவேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளார்; மத்திய மந்திரி கலந்து கொள்ளும் விழா என்பது ஏதோ நிச்சயதார்த்தத்திற்கு பெண் பார்க்க வருவதைப் போல இன்றைக்கு ஆக்கப் படுகிறது என்றால் இந்த தமிழ்நாடு எவ்வளவு அவமானப்படுத்தப்பட்டுப்போய் இருக்கின்றது என்பதை நாம் தெரிந்து கொள்ள முடிகிறது எனவும் தெரிவித்தார்.

...காங்கிரஸ் கட்சியின் செயல் வீரர்கள் கூட்டம் இடம்பெற்றது அதில் பேசிய சட்டப் பேரவை உறுப்பினர் யசோதா தமதுரையில் காங்கிரசில் எட்டப்பன்கள் அதிகம். கொள்ளு விடுகிற மந்திரிகளும் இங்கே தான் இருக்கிறார்கள். புடவை வாங்கி வரும் மந்திரிகளும் இங்கே தான் இருக்கிறார்கள் அந்த அம்மாவுக்கு புடவை இல்லையா? நான் கல்கத்தா வீதியில் கடை கடையாக அலைந்து வாங்கி வந்த புடவை நேரில் கொடுக்கலாம் என்றிருந்தேன் சந்தர்ப்பம் வாய்க்கவில்லையே என்று பேசும் மந்திரிகளும் இருக்கிறார்கள்.

அவர் புடவை வாங்க வேண்டுமானால் நிறைய புடவை வாங்கி சத்தியமூர்த்தி பவனுக்கு அனுப்பட்டும் ஏழை எளிய மக்களுக்கு கொடுக்கலாம் புடவை வாங்கிக் கொண்டு இது போன்று கொள்ளு விடுகிற மந்திரிகள் இங்கு தான் இருக்கிறார்கள்; இத

## காங்கிரஸ்தலைவர்பதவியில் வாழப்பாடி நீடிக்கக்கூடாது

### - அமைச்சர் தங்கபாலு தெரிவிப்பு

(சென்னை)

பிரதமர் நரசிம்மராவுக்கு எதிரான துரோக மனம்கொண்ட வாழப்பாடி இராமமூர்த்தி இனி ஒரு நிமிடம்கூட தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவியில் நீடிக்கக்கூடாது என்று மத்திய அமைச்சர் தங்கபாலு கூறியுள்ளார்;

அண்மையில் சென்னையில் நிருபர்கள் மத்தியில் பேசிய அவர் மேலும் கூறுகையில், கடந்த சில தினங்களாக வாழப்பாடி மத்திய அரசு தமிழக மக்களை வஞ்சித்து விட்டது என்ற தவறான கருத்தை பரப்பி வருகிறார். இதனை நான் வன்மையாக கண்டிக்கிறேன்.

பிரதமருக்கு எதிராக சிறை நிரப்பும் போராட்டம் நடத்தப் போவதாக இராமமூர்த்தி கூறியுள்ளார். இது அவரது சுயரூபத்தைக் காட்டுவதாக இருக்கிறது. அ. இ. அ. தி. மு. கவுடன் காங்கிரஸ் கூட்டணி அமைத்தால் சிறை நிரப்பும் போராட்டம் நடத்தப்படுமென வாழப்பாடி இராமமூர்த்தி கூறியுள்ளார் என்பது தெரிந்ததே;

அமைச்சர் தங்கபாலு மேலும் கூறுகையில் வாழப்பாடி இராமமூர்த்தி நரசிம்மராவுக்கு எதிராகவும். மத்திய அரசுக்கு எதிராகவும், காங்கிரசுக்கு எதிராகவும் செயற்படுவதாகக் குற்றம் சாட்டினார்.

## தமிழாராய்ச்சிமாநாடுநடத்த தமிழக அரசு ஏற்பாடு

(சென்னை)

அடுத்த ஆண்டின் முதல் எட்டு நாட்களிலும் அனைத்துலகத்தமிழ் ஆராய்ச்சிமாநாட்டை தஞ்சாவூரில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை தமிழக அரசு மேற்கொண்டுள்ளது;

எட்டாவது தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் பங்குபற்றும் சுமார் எண்ணூறுக்கும் அதிகமான பேராளர்களுக்கான உணவு மற்றும் தங்கும் வசதி குறித்து ஆராய்வதற்கான கூட்டம் முதலமைச்சர் தலைமையில் நடைபெற்றது;

ஆய்வரங்கம் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு புதிய கலையரங்கம் அமைப்பது தொடர்பாகவும் முதல்வர் இங்கு ஆலோசனை தெரிவித்தார். உலகத் தமிழ் மாநாட்டை சிறப்புற நடத்துவதற்காக பதின் மூன்று துணைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது தெரிந்ததே;

### மத்திய அரசு கண்காணிப்பு

(சென்னை)

தமிழ்நாட்டில் நடந்துவரும் சம்பவங்களை மத்திய அரசு கண்காணித்து வருகிறது என தமிழக ஆளுநர் சென்னாரெட்டி கூறியுள்ளார் சேலத்தில் நடைபெற்ற கம்பன் விழாவில் அவர் கலந்துகொண்டு பேசினார்;

மக்களுடைய நடவடிக்கைகளையும் உணர்வுகளையும் புரிந்துகொள்ளாமல் ஜனநாயகத்தை நல்லமுறையில் நடத்த முடியாது; சிறிது காலமாவது நான் அமைதியாக இருக்க விரும்புகிறேன். ஆளுநர் என்பவர் சிறிதுகட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளவேண்டும். சிலநாட்கள் பொறுத்திருப்போம்;

## பிரதமரிடம் முறையீடு

(சென்னை)

மாநிலத்தில் அ. தி. மு. க ஆட்சியை எதிர்த்தும், விமர்சித்தும் காங்கிரஸ் கட்சியின் ஒரு சாரார் நடந்து வருகின்றனர்; இதனால்தான் பாராளுமன்றத்தில் காங்கிரசை ஆதரித்து நடக்க முடியாமல் இருப்பதாக அ தி மு. க. பாராளுமன்ற உறுப்பினர்களின் தலைவர் பி. ஜி. நாராயணன், மாநிலங்களவை உறுப்பினர்களின் தலைவர் சுவாமிநாதன் ஆகியோர் பிரதமர் பி. வி. நரசிம்மராவிடம் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் பிரதமர் நரசிம்மராவை சந்தித்துப் பேசிய இவர்கள் அ. தி. மு. க. விற்கு எதிரான போக்கைக் கடைப்பிடிக்கும் காங்கிரஸ்காரர்களை பிரதமர் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ளாவிட்டால் காங்கிரசுக்கு ஆதரவளிப்பது கடினம் எனவும் கூறியுள்ளனர்.

அ. தி. மு. க. காங்கிரஸ் உறவை சீராக்கவும், கருத்து வேறுபாடுகளை நீக்கவும், கூட்டணி விஷயத்தில் ஏற்பட்ட விரிசல்களை போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவும் தயாராக இருப்பதாக பிரதமர் நரசிம்மராவ் இவர்களுக்கு உறுதி அளித்துள்ளார்;

இதேவேளை கடந்த சில மாதங்களில் முதல்வர் ஜெயலலிதா மூன்று முறை பிரதமரை நேரில் சந்தித்தபோதும் கூட்டணி பற்றிய பேச்சு எதற்கும் நேரடியாக இடமளிக்கப்படவில்லையென்றும் எனினும் முதல்வர் மாநில காங்கிரஸ் தலைவர்களின் போக்கில் அதிருப்தியுற்றிருப்பது பிரதமருக்கு சுட்டிக்காட்டப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.


## VACANCY
## POST OF SECRETARY

Immediate vacancy exists for a personable efficient Secretary who should be a Member of a Church affliated to the National Christian Council.

A Pass in the Advanced Level and possess good Secretarial skills and be able to deal with correspondence independantly & efficiently. Should possess a sound knowledge of English both spoken & written.

Salary $\frac{2,500.00 - 3,250.00}{75\ 00 \times 10}$ Or Negotiable.

Age - Below 45 years.

Applications giving full bio - data (with copies of certificates) should be sent under registered cover to reach the

**President**
**Y. M. C. A.**
**JAFFNA.**
**on or before 23rd, March, 1994.**

(சி) 8833)

யாழ். புனித மரியாள் வித்தியாலய மாணவர் நலன்புரிச் சங்க அன்பளிப்பு நிதிக்காக
4வது மேடையாக வித்தியாலய மாணவர் வழங்கும்

இன்று

செல்லையா மெற்றாஸ்மயில் நெறியாள்கையில்

# 'காத்தவராயன்'

தலைவர் : சி. தார்சிசியஸ், அதிபர் புனித மரியாள் வித்தியாலயம்;
முதன்மை விருந்தினர்: கலாநிதி க. குணராசா (பிரதேச செயலர், யாழ்ப்பாணம்.)
சிறப்பு விருந்தினர்: செல்வி எஸ்- கலைமணி (பொறுப்பாளர், கலை பண்பாட்டுக் கழகம், மகளிர் அமைப்பு)

காலம்: 15-03-1994 செவ்வாய்க்கிழமை மாலை 6-30 மணி
இடம் : புனித மரியாள் வித்தியாலய (O.L.R.) திறந்தவெளி அரங்கு

அன்பளிப்பு: ரூபா 10 மட்டும்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விளம்பர அன்பளிப்பு:
எரிக் கணேஷ், 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (7744)

நல்லூர் கிளை நூலகம்
யாழ்ப்பாணம்



### சிந்தனைக்கு

நிர்ப்பந்தம் கொடுங்கோலரின் நியாயவாதம் மட்டுமல்ல நாட்டுப்பற்றுள்ளோரின் எதிர் வழக்கு, நாட்டின் பாதுகாப்பு.

— ஜேம்ஸ் வில்ஸன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 15-03-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05

## பிரதமர் ரணிலின் பொருத்தமற்ற பதில்

சிறிலங்கா அரசியல்வாதிகளின் பேச்சுக்கள் பெரும்பாலும் யதார்த்தத்திற்குப் புறம்பானதாகவும் அகங்காரம் மிக்கதாகவும், சிலவேளை சிறுபிள்ளைத்தனமானதாகவும் இருப்பதுண்டு. இந்த வகையிலேயே சிறிலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இந்துப் பத்திரிகைக்கு அண்மையில் வழங்கிய பேட்டியில் சில பகுதிகள் உள்ளன.

பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்கு சமாதான நிலையை ஏற்படுத்த அரசசார்பற்ற நிறுவனங்கள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. பேச்சுவார்த்தையின் போது விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் குழு வருவதானால், அக்குழுவில் பிரபாகரனும் இடம் பெற்றிருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ள அவர் தற்போதைய நிலையில் வேறு வழிகள் எதுவும் தென்படவில்லை, இதனால் வடபகுதி மீது தொடர்ந்தும் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் இயக்கம், ஒன்றிற்குப் பல தடவை இனப்பிரச்சினைக்குச் சமாதான தீர்வொன்றைப் பேச்சுவார்த்தை மூலம் காண்பதற்குத் தயாராக இருப்பதாக அறிவித்து விட்டது ஆனால், அரச தரப்பினரே இனப் பிரச்சினைக்குச் சமாதான தீர்வு காண்பதைப் பற்றி எதுவித சமிக்ஞைகளையும் வெளியிடுவதாக இல்லை. மாறாக இராணுவத் தீர்வு பற்றியே பேசியும், வலியுறுத்தியும் வருகின்றனர். அதற்கு ஏற்றால் போல் செயற்பட்டும் வருகின்றனர்.

இதேவேளை, பிரதமர் ரணில் அரசசார்பற்ற நிறுவனங்கள் சமாதான முயற்சிகளில் ஈடுபடுவதாகத் தற்பொழுது கூறினாலும், அவற்றில் எதற்காவது அரசாங்கத்தின் ஆசீர்வாதம் இருப்பதாகத் தெரியவில்லை; அரசாங்கமும் அதை வெளிப்படுத்தவில்லை. மாறாக,

# வேண்டாதவிருந்தாளியாக சிங்களவரிடம் புகுந்த மாகாண சபைகள் உருவாக்கிய சிக்கல்கள்

அண்மையில் தென்மாகாண சபை கலைக்கப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்னர் அதன் ஒரு உறுப்பினராக இருந்த பியதாசஅபேவிக்கிரம என்பவர் கூறிய கூற்றுக்கள் மிகவும் அவதானமாகப் பரிசீலிக்கப்பட வேண்டியுள்ளன.

அவர் கூறியது இதுதான். ''மாகாணசபைத் திட்டம் கொண்டு வரப்பட்டது தமிழ் பேசும் மக்களின் இனப்பிரச்சினையை தீர்க்கும் ஒரு நோக்கம் கொண்டதாகவே அது சிங்களப் பகுதிகளுக்கும் தேவை என்பதற்காக அல்ல. சிங்களப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டது, ஒரு தேவையற்ற குழப்பத்தை சிங்கள மக்களிடையே வளர்க்கவே உதவியிருக்கின்றது. இதுவே அவர் பேசியதன் சாரம்.

சிங்கள மக்களிடையே பிளவுகளையும் போட்டி பூசல்களையும் உருவாக்குவதற்கு மாகாணசபையின் செயற்பாடு காரணமாக அமைந்துள்ளது என தற்போது சிங்கள பொது மக்கள் உணர்ந்து வருவதை இவரின் கூற்றிலிருந்துஅறியக் கூடியதாக உள்ளது. சிங்கள மக்களிடையே இக்கருத்து பொதுவாக வலுப்பெற்று வருகின்றது என்ற உண்மையை எவரும் மறுக்க முடியாது. மாகாணசபை அமைப்பு எப்போதாவது சிங்கள மக்களால் வேண்டப்பட்டதொன்று அல்ல. அவர்கள் மேல்திணிக்கப்பட்டதொன்று எனக் கூறலாம்

தமிழ் பேசும்மக்களுக்கான தீர்வு என வெளிக்காட்டாது. கட்சி செல்வாக்கை பாதுகாப்பதற்காக இலங்கை முழுவதுக்குமான ஒரு அரசியல் அமைப்புமுறை என மாகாணசபைகளைமுன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தன அறிமுகப்படுத்தினார்.

''சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்த கதை''யாக சிங்களவர் மத்தியில் மாகாணசபை அமைப்பு பல புதிய பிரச்சினைகளை உருவாக்கியுள்ளது.

''கண்டிய மக்களுக்கு ஒரு தனி அரசியல் அமைப்பை கோருவது எவ்வகையிலும் பிழையானது அல்ல'' இந்த அர்த்தத்தில் ஒரு கண்டிய சிங்கள அரசியல்வாதி தற்போது கருத்து வெளியிட்டுள்ளார். இது, மாகாணசபை அமைப்பு சிங்களப் பகுதிகளில் புகுத்தப்பட்டதன் காரணமாக கண்டிய சிங்கள மக்கள் மத்தியில் எழுந்துள்ள ஒருதாக்கமாகும்

மாகாணசபை என்ற அர்த்தமில்லாத எல்லைவரையறையை கொண்ட அமைப்பிலும் பார்க்க ஒரு இனத்தொகுதி மக்களின் ஒரு அமைப்பாக இருப்பது விரும்பத்தக்கது என்று உணரப்படுவதை இது எடுத்துக்காட்டுகின்றது.

கண்டிய மக்களுக்கு ஒரு தனி ஆட்சி அமைப்பு என்ற யோசனை ஒருபுதுக்கருத்தாக முன்வைக்கப்பட்டுள்ளது என்று கொள்ளமுடியாது. சுதந்திரத்திற்குப்பின் 1950ஆம் ஆண்டுகளின் முற்பகுதியிலேயே அக்காலத்தில் நாவலப்பிட்டி பாராளுமன்றஅங்கத்தினராகஇருந்த ஆர். ஈ ஜயதிலக்க என்பவர் இவ்வகையான யோசனையை வெளியிட்டு பகிரங்கமாக பேசியும் வந்தார்.

அக்காலத்தில்இலங்கை தமிழரசுக்கட்சியும் இதே சமஷ்டி கோரிக்கையை முன்வைத்துக் கொண்டிருந்த காரணத்தினாலும் அப்போதைய சிங்கள பேரினவாத அரசியல்கட்சிகள் சமஷ்டி என்ற பதத்திற்கு பிரிவினை என்ற விளக்கத்தை சிங்கள மக்களிடையே பரப்பி வந்தாலும் ஜயதிலக்கவின் கண்டியமக்களுக்கான சமஷ்டி கோரிக்கையும் தானாக வலுவிழந்துவிட்டது

கண்டிய இராச்சியம் அந்நியரால் கைப்பற்றப்பட்ட இலங்கையின் கடைசி பகுதியாகும். போர்த்துக்கேயராலும், ஒல்லாந்தராலும் கைப்பற்ற முடியாதவாறு திறமையான படைபலத்துடனும், அரசியல் சாணக்கியத்துடனும் நிலைத்து நின்ற கண்டிய அரசின் தன்மை கண்டிய மக்கள் தங்களைத்தாங்கள் ஆளுவதற்கு எந்தவிதகுறைபாடும் கொண்டவர்கள் அல்லஎன்பதை நிரூபித்திருந்தது.

பிரித்தானியரும் பல முறையாக கண்டியை கைப்பற்ற முயற்சி செய்து தோல்வியையே தழுவினர். பின் 1815ஆம் ஆண்டில் ஒரு ஒப்பந்தத்தின் மூலம் கண்டிய பிரதேசம் இதரபகுதிகளுடன்ஒன்றிணைக்கப்பட்டது. இருந்தும் ஆரம்பத்தில்கண்டியமக்களிடையே வழமையிலிருந்த ஆள்சார்பான சட்டங்கள்,பழக்கவழக்கங்கள், சம்பிரதாயங்களை மதித்தேவெள்ளைக்கார அரசு செயற்பட்டு வந்திருந்தது.

கண்டியர்களுக்கென திருமணம் சார்பானதிகா, பின்னா முறைகள் தற்போதும் பின்பற்றப்பட்டு வரப்படுகின்றன. கண்டியச் சட்டம் சொத்து பின்னுரிமை சம்பந்தமாகவும் ஏனைய சட்டங்களைவிட தனித்தன்மை வாய்ந்ததாக இன்றும் செயற்படுகின்றது கண்டியசட்டம் வழக்கிலுள்ள பிரதேசங்களாக மத்திய,வடமத்திய, ஊவா, சப்பிரகமுவ மாகாணங்களையும்,வடமேல் மாகாணத்தில் குருநாகலைச் சேர்ந்த சில பகுதிகளையும் அடக்குமென கண்டியசட்டம் கூறுகின்றது.

கரையோர சிங்கள மக்களுக்கான சட்டமாக றோமன்-டச்சுசட்டம்வலுவிலிருப்பதும் கண்டிய மக்களுக்கு இச்சட்டம் ஏற்பானதல்ல என்பதும் கண்டிய மக்களை ஒரு தனித் தொகுதி மக்களாக கணிக்கக் கூடியதென்பதற்கு பலமிக்க ஆதாரமாகக் கொள்ளலாம்.

இந்த நிலைமைகள் பழைய கண்டிய இராச்சியம் அமைந்த பகுதிகளைக்கொண்ட ஒரு தனி அரசியல்அமைப்பைமீண்டும் உருவாக்கவேண்டுமென்ற வலுவான கோரிக்கை எழுவதற்கு அடித்தளமாக அமைகின்றது.

இதனால் மாகாண சபை என்ற ஒரு சிறிய குறுகிய எல்லைப் பிரதேசத்துக்கென இருக்கின்ற அரசியல் அமைப்பு விஸ்தரிக்கப்பட வேண்டுமென்பதும் அது ஒரு இனத் தொகுதி மக்களுக்கு அல்லது ஒரு பாரம்பரியம் கொண்ட மக்களின் தொகுதிக்கு என்ற ஒரு அடிப்படையில் மட்டுமே அதிகார பரவலாக்க செயற்பாடு வலிமைமிக்கதாகவும், நடைமுறைசாத்தியமிக்கதாகவும் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியது என்ற சிந்தனையை உருவாக்கி வருகின்றது.

மறுபக்கம் பார்க்கப்போனால் பல மாகாணசபைகள் இருப்பது அதற்கான அரசாங்க செலவீனத்தை தேவையற்ற வகையில் பலமடங்கு அதிகரிக்கச் செய்கின்றது என்ற உண்மையையும்மறுத்து விடமுடியாது: விசேடமாக தற்போது அரசாங்கம் முகம் கொடுத்துவரும் நிதிப்பற்றாக் குறைக்கு மாகாணசபை உருவாக்கமும் ஒரு காரணமாக அமைந்துள்ளது.

ஓரே விடயத்தை கையாளுவதற்கு மூன்று வெவ்வேறான அரசியல்அமைப்புக்கள் இன்று செயல்படுகின்றன. அவை மத்திய அரசாங்கம், மாகாண சபை,உள்ளூராட்சிசபை என்பனவாகும்.

மாகாண சபைகளுக்கு போதிய அதிகாரப் பரவலாக்கம் செய்யாத காரணத்தினால் இன்றும் மத்திய அரசாங்க அமைப்புக்கள் குறைக்கப்படவில்லை. மாறாக மத்திய அமைச்சுக்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துச் செல்கின்றதையே காணக் கூடியதாக உள்ளது. அரசாங்க கட்சியில் பாராளுமன்ற அங்கத்தவர்களாக இருப்பவர்களில் வெகு சிலரைத் தவிர கூடிய பகுதியினர் ஏதாவது ஒரு அமைச்சராக இருக்கின்றனர். அவர்கள் கபினட் அமைச்சர்களாக அல்லது திட்ட அமைச்சர்களாக அல்லது இராஜாங்க அமைச்சர்களாகபணிபுரிகின்றனர். இது மாகாணசபை உருவாக்கத்தினால் மத்திய அரசாங்கத்தின் செலவீனம்எந்த வகையிலும் குறைக்கப்படவில்லை என்பதை தெளிவாக காட்டுகின்றது.

தற்போது 8மாகாணசபைகள் அமைக்கப்பட்டு அதற்கான அங்கத்தவர்கள், அமைச்சர்கள் (வடகீழ் மாகாணத்தை தவிர) ஆகியோருக்கான வேதனம்,செலவுப்படி, வாகனம் ஆகியவைகளும் அத்துடன் அமைச்சுக்கள், தலைமைத் திணைக்களங்கள் ஒவ்வொரு மாகாணத்திற்கும் தனித்தனியாக அமைக்கப்பட்டு அவைகளின் செயற்பாட்டிற்கு கட்டிடங்கள், தளபாடங்கள், பதவிநிலை உத்தியோகத்தர்கள்,இலிகிதர்கள், தட்டச்சாளர்கள், பணியாளர்கள், வாகனங்கள், சாரதிகள், எரிபொருள் என இன்னுமொரு மேலதிக செலவீனம் ஏற்பட்டிருப்பது அரசாங்கத்தின் 'கஜானா'வை உறிஞ்சிக் குடிக்கும் பெருச்சாளியாக கருதப்படுகின்றது.

மத்திய அரசாங்கத்தில் அமைச்சுக்களில் எந்தவித குறைப்பும் செய்யப்படாத நிலைமையில்8 மாகாணங்களிலும் அமைச்சுக்களும் அமைப்புக்களும் தேவைதானா என்பதும் இன்று ஆராயப்பட வேண்டியதொன்றாகும், அதிகாரத்தைக் கொடாமல் பொதுமக்களின் பணத்தை மாத்திரம் மாகாணசபை அமைப்புக்கு அதன் செயற்பாட்டிற்கு செலவிடுவது ஒருவீண்விரயமாகும்

## ரஷ்யா பெரிய நாடு அதனுடன் விளையாடக்கூடாது

## சுதந்திரம் குறித்து பெர்முடா ஆராய்வு

(ஹமில்டன்)

400 வருடங்களாக பிரிட்

டுக்க வேண்டும்: அதை அடைய எம்மால் முடியும்

... இருப்பதாகத் தெரியவில்லை; அரசாங்கமும் அதை வெளிப்படுத்தவில்லை. மாறாக, அவரே அரசசார்பற்ற நிறுவனங்கள், மத அமைப்புக்கள் எவற்றுடனும் நாம் இனப்பிரச்சினை தொடர்பாக பேச்சுவார்த்தைகளை நடத்தவில்லை எனவும் இனப்பிரச்சினை விவகாரத்தில் ஓர் இணக்கத்திற்கு வரவில்லை எனவும் கடந்த மாத இறுதியில் பகிரங்கமாக அறிவிப்பும் விடுத்திருந்தார்.

அத்தோடு, சமாதான நல்லெண்ண முயற்சிகளை மேற்கொண்டு வடக்கே வந்து சென்ற மதத்தாபனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பனவற்றிற்குச் சிறிலங்கா அரசாங்கம் வரவேற்பு அளிக்கவோ அன்றி அவர்களின் முயற்சியை ஊக்குவிக்கவோ இல்லை. இந்நிலையில் அரச சார்பற்ற நிறுவனங்கள் சமாதான முயற்சியில் ஈடுபடுவதை ஏதோ அரச தரப்பு முயற்சி போல் சித்திரிக்க முற்படுவது ஒரு ஏமாற்று நடவடிக்கையாகும். மேலும், அரசதரப்பு உடன்பாட்டையே துச்சமாக மதித்து தூக்கி எறியும் சிறிலங்கா அரசாங்கம் அரச சார்பற்ற நிறுவனங்களினதும், பௌத்தம் சாராத மத அமைப்புக்களின் முயற்சிகளையும் எந்தளவில் கடைப்பிடிக்கும் என்பது கேள்விக்குரியதே.

விடுதலைப் புலிகள் சமாதான பேச்சுக்குத் தயாராக இருக்கின்றார்கள்; சமாதான சூழ்நிலை உருவாக்கும் வரையில் முயற்சிகளில் ஈடுபட உள்நாட்டு வெளிநாட்டு அமைப்புகள், அரசுகள் தயாராக உள்ளன. இந்நிலையில், இனப்பிரச்சினைத்தீர்வுக்கு இராணுவத் தீர்வைத் தவிரவேறுவழி தெரியவில்லை என்பதுபிரதமர் ரணில் சிந்திக்கும் ஆற்றல் உள்ளவரா என்ற கேள்வியையே எழுப்புவதாகவுள்ளது. ஏனெனில், அந்தளவிற்கு ரணிலின் கூற்றானது மட்டரகமானதாக உள்ளது.

ஆனால், ஒரு நாட்டின் பிரதமர் என்ற நிலைக்கு உயர்ந்து விட்ட ரணில் சிந்திக்கத் தெரியாதவராக இருக்க முடியாது; ஆகையினால், ரணில் இராணுவத் தீர்வைத் தவிர மற்றவற்றைச் சிந்திக்கத் தயாராக இல்லை என்பதையே இது காட்டுகின்றது; இதேவேளை, பௌத்த பேரினவாத அரசு ஒன்றிற்கு தலைமை தாங்க ஆசைப்படும் ரணில் விக்கிரமசிங்கா சமாதானம் பற்றி சிந்தனையைச் செலுத்துவார் என எதிர்பார்ப்பதும் தவறுதான்.

---

# அதனுடன் விளையாட முடியாது

## அதிபர் யெல்ட்சின் தெரிவிப்பு

(மாஸ்கோ)

மாஸ்கோவிற்கு விஜயம் செய்த அமெரிக்க முன்னாள் அதிபர் நிக்ஸனைச் சந்திக்க ரஷ்ய ஜனாதிபதி பொறிஸ் யெல்ட்சின் மறுப்புதெரிவித்து விட்டார். அத்துடன் 81 வயதான நிக்ஸனுக்கு மாஸ்கோவில் அளிக்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ காரையும் மெய்பாதுகாவலர்களையும், ரஷ்ய அதிகாரிகள் மீளப்பெற்றுக் கொண்டனர்; யெல்ட்சின் நிர்வாகத்தின்இந்நடவடிக்கைகள் தமக்கு ஆச்சரியத்தை ஊட்டியிருப்பதாக நிக்ஸனின் உதவியாளர்கள் கூறியுள்ளனர்

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது ரஷ்ய அதிபர் பொறிஸ் யெல்ட்சின்தமது அரசியல் எதிரிகள் எனக்கருதும் முன்னாள் ரஷ்ய உப ஜனாதிபதி ருட்ஸ்கோஸ், கம்யூனிஸ்ட் தலைவர் ஸியூகனோவ் போன்றோரை நிக்ஸன் சந்தித்து பேசியதைத் தொடர்ந்து ரஷ்யஅதிபரும் அவரதுநிர்வாகமும் கோபமடைந்துள்ளது: ரஷ்யா ஒரு பெரிய நாடு; அதனுடன் விளையாட முடியாது என்பதை அவர்கள் அறிந்து கொள்ளட்டும்; எனரஷ்ய அதிபர் யெல்ட்சின் வெளிப்படையாகவே கூறியுள்ளார்

இதனைத் தொடர்ந்து ரஷ்ய பிரதமர் செர்னோமிர்டின் உட்பட இதர ரஷ்யத் தலைவர்களை சந்திக்கும் திட்டத்தை நிக்ஸன் ரத்து செய்ததாக அவரது உதவியாளர்கள் தெரிவித்துள்ளனர். இதேவேளை நிக்ஸனைச் சந்திக்க யெல்ட்சின் மறுப்பதால் உலகம் அழிந்து விடாது ஆனால் யெல்ட்சின் தமது முடிவை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று அமெரிக்க அதிபர் கிளிண்டன் கூறியுள்ளார்.

---

### குடியரசாக விருப்பம்

(ஹமில்டன்)

பிரிட்டனுடனான அரசமைப்பு தொடர்புகளை துண்டித்து படிப்படியாக தாம் ஒரு குடியரசாக மாறப்போவதாக நியூசிலாந்து அறிவித்துள்ளது; நியூசிலாந்தின்மிக உயர்ந்தமேன்முறையீட்டு நீதிமன்றத்தை இன்னும் மூன்று நான்கு ஆண்டுகளில் பயன்படுத்தமாட்டோம் இந்நீதிமன்றம் தற்போது லண்டன் ஆதரவு பிரிவுக்கவுன்சிலாக இயங்கிவருகிறது என நியூசிலாந்துப் பிரதமர் ஜிம்போல்ஜர்கூறினார்.

400 வருடங்களாக பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்து வரும் இங்கிலாந்தின் மிகப் பழையதும் செல்வந்தக் காலனியுமான பெர்முடா தனது சுதந்திரம் பற்றி ஆலோசித்து வருவதாக அதன் பிரதமரான சேர் ஜோன் சுவான் எலிசபேத் மகாராணிக்கு கூறியுள்ளார்

எமது எதிர்காலக் கடமைகளுக்கு நாமே முகம் கொடுக்க வேண்டும். அதை அடைய எம்மால் முடியும் என நம்புகிறேன் என அங்கு விஜயம் செய்த பிரிட்டிஷ் மகாராணியிடம் அவர் தெரிவித்தார்.

கறுப்பின மக்கள் பெரும்பான்மையாகவுள்ள பெர்முடாவின் இரண்டாவது கறுப்பினப் பிரதமர் சுவான் ஆவார்.

---

# மசூதி படுகொலை

# ஐ. நாவில் கண்டனம்

(ஜெனீவா)

ஏப்ரோன் மசூதியில் பாலத்தீனியர்கள் படுகொலை செய்யப்பட்டமைக்கு கண்டனம் செய்யும் தீர்மானம் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் முறைப்படியாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்தில் இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அரபுப் பிரதேசங்களில், சர்வதேசக்குழு ஈடுபடுத்தப்படவேண்டுமென்றும் கோரப்பட்டுள்ளது இத்தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்படலாம் எனத்தெரியவருகிறது

---

# தாய்லாந்து ஏழைபெண்கள்

# தரகர்களுக்கு விற்பனை

(பாங்கொக்)

தாய்லாந்தின் வடபகுதியிலிருக்கும் ஏழ்மையான கிராமங்களில் வாழும் 12 -14 வயதுக்கு இடைப்பட்ட பெண்களை தரகர்கள் விலைக்கு வாங்கும் சம்பவங்கள் சமீப நாட்களில் மிகவும் அதிகரித்து இருப்பதாக தாய்லாந்து கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார் அண்மையில் இவ்விதம் வாங்கப்பட்ட சுமார் 240 பெண்கள் தெற்கே பாங்கொக்கிற்கும் இதர நகரங்களுக்கும் அனுப்பப்பட்டு அங்கு பாலியல்நடவடிக்கைகளுக்குபயன்படுத்தப்படுவதாகவும் கூறப்படுகிறது.

பயாஓ, சியாங்ராய், லம்பாங் மாகாணங்களிலுள்ள ஏஜண்டுகள் பெண்களை ஏற்கனவே 'புக்' செய்து வைத்திருப்பதாகவும் மேலும் சுமார் 500பெண்கள் இக்கூட்டத்தில் சேர விருப்பதாகவும் தெரியவந்துள்ளது இது தவிர மேலும் 1500 பெண்கள் தெற்கிலுள்ள பெரிய நகர விடுதிகளுக்கு செல்ல இருப்பதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்'

---

# ஆளுநர் மீதான உத்தரவு

# நீதிமன்று தள்ளுபடி

(சென்னை)

அ.தி.மு.க அரசைக் கலைக்கப்போவதாக அச்சுறுத்திய வாறு தொடர்ந்தும் ஆளுநர் சென்னாரெட்டி எப்படி பதவியில் இருக்க முடியும் என அவரது செயற்பாட்டிற்கு தடை விதிக்கக்கோரி தாக்கல் செய்த இடைக்காலத் தடை உத்தரவை சென்னை உயர்நீதி மன்றம் தள்ளுபடி செய்தது.

தடை உத்தரவை தள்ளுபடி செய்து நீதிபதி கருத்து தெரிவிக்கையில் பத்திரிகையில் வெளியான அறிக்கை ஒன்றை நம்பியே மனுதாரர் வழக்கு தாக்கல் செய்துள்ளார் இதனைத் தவிர வேறு சான்றுகள் அவர் சமர்ப்பிக்காதது ஆளுநர் மீதான குற்றச்சாட்டு அவரது தனிப்பட்ட அறிவின் அடிப்படையில் விடுக்கப்பட்டது அல்ல என விளங்குகிறது. செய்திக் குறிப்புகளில் கூறப்படும் விடயங்கள் தொடர்பாக நீதிமன்றுகள் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது என்றார்.

---

# 17 பேரை கொன்று புசித்த கொலையாளி

(சிக்காகோ)

தொடர்ச்சியான கொலைகளில் ஈடுபட்டு எய்ட்ஸ் காரணமாக சிறையில் மரணமுற்ற லெரி ஜலர் (41) என்பவர் தாம் 21 இளைஞர்களை கொலை செய்ததை ஒப்புக் கொண்டிருந்தார் என அவரது வழக்கறிஞர் கூறியுள்ளார்

ஜலரினால் கொல்லப்பட்டவர்களின் பட்டியலை அவ்வழக்கறிஞர் வெளியிட்டுள்ளார். 1982க்கும் 1984க்கும் இடையில் இலினோய்ஸ் இன்டியான மாநிலங்களில் இக்கொலைகள் இடம்பெற்றுள்ளன, இவருடன் கைதான மற்றுமோர் தொடர் கொலையாளியான ஜிப்ரிடோமர் 17 இளைஞர்களையும் சிறுவர்களையும் கொன்று அவர்கள் சிலரின் இறைச்சியை உண்டதாக சிறையில் இருந்து அளித்த தொலைக்காட்சி பேட்டி ஒன்றில் குறிப்பிட்டார்.

தமது உடம்பின் ஒரு பகுதியாக கொல்லப்பட்டவர்கள் இருக்கவேண்டும் என்பதற்காக தாம் அவர்களின் இறைச்சியை உண்டு திருப்தி கண்டதாக அக்கைதி குறிப்பிட்டார்- இவருக்கு ஆயுள்தண்டனை விதிக்கப் பட்டுள்ளது-

# உரியகாலத்திலேயேஜனாதிபதிதேர்தல் சர்வஜன வாக்கெடுப்பு விரைவில்

## - ஐ. தே. க. பொதுச் செயலாளர் சிறிசேன கூரே

(கொழும்பு)
உரிய காலத்திற்கு முன்னர் ஜனாதிபதி தேர்தல் நடாத்தும் சாத்தியம் இல்லை. இத்தேர்தல் உரிய திகதியிலேயே நடத்தப்படும். முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மரணத்தை அடுத்து டி. பி. விஜேதுங்கா பதவி ஏற்றதால் உரிய காலத்திற்கு முன்னர் இத்தேர்தலை நடத்த முடியாது. இவ்வாறு வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சரும், ஐ. தே. கவின் பொதுச் செயலாளருமாகிய சிறிசேன கூரே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி தேர்தலுக்கான ஐ. தே. கட்சியின் விஞ்ஞாபனத்தை தயாரிப்பதற்கு நீண்டகாலம் உள்ளது. உரிய காலத்தில் இந்த விஞ்ஞாபனத்தை வெளியிடுவோம்.

வடக்கு- கிழக்கு இணைப்புக்கான சர்வஜன வாக்கெடுப்புவிரைவில் நடத்தப்படும். சர்வஜன வாக்கெடுப்புக்கான திகதி தென்மாகாண சபைத்தேர்தலை அடுத்து வெளியிடப்படும்.

தென் மாகாணத்தில் அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் நடவடிக்கையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஈடுபட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பாராளுமன்ற ஜனாதிபதி தெரிவு; சிறுபான்மை இனத்தை பாதிக்கும்

(கொழும்பு)
சிறிலங்காவின் பாராளுமன்றத்தின்மூலம் ஜனாதிபதி தெரிவுசெய்யப்படுவாரேயானால் சிறுபான்மை இனம் மேலும் புறக்கணிக்கப்படும் என அரசியல் செய்தியாளர் ஒருவர் கொழும்பு தினசரி ஒன்றில் எழுதிய கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி பதவி பாராளுமன்றம்மூலம் தெரிவுசெய்யப்படுமாயின் போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் சிறுபான்மை மக்களது அரசியல் தேவை, அபிவிருத்தி, கோரிக்கைகள் போன்றவற்றை செவிமடுக்க அவசியமற்றவர்களாக காணப்படுவதோடு, இப்பிரதேசங்களில் உள்ள தேர்தல் பிரசாரம் செய்ய அவசியமற்றவராகவும் இருக்கிறார்.

இதுமட்டுமன்றி பெரும்பான்மை சிங்களவர்களை அதிகப்படியாகக் கொண்ட பாராளுமன்றத்தில் சிறுபான்மையினரின் ஆதரவு அவசியமற்றதாக கருதப்பட்டு சிறுபான்மை கட்சிகள் புறக்கணிக்கப்படும் ஆபத்தும் உள்ளது. அத்துடன் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண அமைக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் அரசியல் அமைப்பு மாற்றங்கள் நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு இம்மாத இறுதிக்குள் முடிவுக்குள் கொண்டுவரப்படலாம். இதனால் சிங்களவரின் ஒற்றுமையை வலியுறுத்த கட்சிகள் முற்படும் எனவும் அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஜனாதிபதித் தேர்தல்

# விஞ்ஞாபனம் தயாரிக்க ஐ.தே.க விரைவில் ஈடுபடும்

(கொழும்பு)
தென்மாகாணசபை தேர்தலை அடுத்து ஜனாதிபதித் தேர்தலுக்குரிய விஞ்ஞாபனத்தை தயாரிக்கும் வேலையில் ஐக்கிய தேசியக் கட்சி ஈடுபட விருப்பதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இவ் விடயம் ஆராயப்பட்டதாகவும் அப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

# வீதி விபத்தில் நால்வர் காயம்

(வடமராட்சி)
வல்லையில் ஏற்பட்ட வாகன துவிச்சக்கர வண்டி விபத்தில் சிக்கி நான்கு பேர் காயமடைந்தனர். இச் சம்பவம் நேற்று பிற்பகல் 4.45 மணியளவில் நடைபெற்றது.

மேற்படி வீதியில் துவிச்சக்கர வண்டியில் சென்றுகொண்டிருந்த போதே இவ்விபத்துச் சம்பவம் நேர்ந்தது. காயமடைந்தவர்களில் புத்தூரைச்சேர்ந்த செ. ரவீந்திரன் (வயது 18) மற்றும் கரவெட்டியைச் சேர்ந்த இ. வசந்தநாயகி (வயது 35) என்பவருப் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (யோ)

### ராக்கிங்கை எதிர்த்தமையால்

# வரவேற்பு விருந்தில் மாணவர் புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)
பல்கலைக்கழக புகுமுக மாணவர்களை வரவேற்கும் முகமாக வருடாவருடம் நடத்தப்படும் வரவேற்பு விருந்திற்கு புகுமுக மாணவர் ஒருவருக்கு அழைப்பு வழங்கப்படவில்லை.

சிரேஷ்ட மாணவர்களின் சொற்களுக்குக்கட்டுப்பட்டு நடக்காமையும், சிரேஷ்ட மாணவர்களின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கா... என்று கூறப்படுகின்றது.

இதேவேளை குறிப்பிட்ட இம்மாணவர் பல்கலைக்கழக சிரேஷ்ட மாணவர்களின் வழமையானவரவேற்புமுறைகளுக்கு (ராக்கிங்கிற்கு) இவர் கட்டுப்படவில்லை என்றும், அத்தகைய நடவடிக்கைகளுக்குக் ஒத்துழைப்பு காட்ட மறுத்தனர் என்றும் அதனாலேயே இவர் திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டுள்ளார்...

# வடமராட்சி கிழக்கில் கடற்படை நடமாட்டம்

(வடமராட்சி கிழக்கு)
வடமராட்சி கிழக்கு பிரதேச கடற் பரப்பில் கடந்த சில நாட்களாக சிறிலங்கா கடற் படையினரின் நடமாட்டம் அதிகமாக காணப்படுகிறது.

கடற்படையினரின் பீரங்கிப் படகுகளினதும் மற்றும் கடற்படைக் கப்பல்களினதும் நடமாட்டத்தை அடிக்கடி அவதானிக்கக் கூடியதாக உள்ளதாக வடமராட்சி கிழக்கில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடற்படையினரது சிறு பீரங்கிப் படகுகளின் ரோந்து நடவடிக்கைகளும் வழமைக்கு மாறாக அதிகமாகக் காணப்படுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க),(தி)

# வீதியில பஸ்ஸை கண்டு குத்திப் பதிந்த விமானம்

(வடமராட்சி)
வல்வெட்டித்துறை குடியிருப்புகள் மீது பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று ... முற்றது. இதனைக் கண்ட பயணிகள் பதறியடித்த நிலையில்பஸ்ஸை விட்டு கீழ இறங்கி மறைவிடங்களைத் தேடி...

# உலகவங்கியின் நடவடிக்கையால் அபிவிருத்தித்திட்டங்கள் ஒத்திவைப்பு

(கொழும்பு)
இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் கூட்டம் உலக வங்கியினால் ஒத்திவைக்கப்பட்டதை தொடர்ந்து அபிவிருத்தி திட்டங்கள் மேலும் ஒத்திவைக்கப்படலாம் என பொருளாதாரவட்டாரங்கள் கருத்து தெரிவிக்கின்றன.

உலக வங்கியின் இந் நடவடிக்கையினால் மாத்தளை, கதிர்காம புகையிரத பாதை அபிவிருத்தி காலி துறைமுக அபிவிருத்தி போன்ற தென் மாகாண அபிவிருத்தியும் தடைப்படும் என அவ்வட்டாரம் மேலும் தெரிவித்துள்ளது.

விமானபஸ் (ஏயர் பஸ்) கொள்வனவு தொடர்பாக இலங்கையில் ஊழல், இராணுவ தளபாட கமிசன்கள் போன்றவற்றினால் உலக வங்கி இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டதாகமேலும் தெரியவருகின்றது.

### மாணவர்

...கூப்பன் கிடைக்கிறது. புதிய திட்டத்தின் படி மதிய உணவுக்கான கூப்பனைபெற விண்ணப்பிக்க வேண்டும். 'ஜனசவிய' உதவி பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் மட்டுமல்ல விரும்பியவர்கள் அனைவரும் விண்ணப்பிக்கலாம் என்றும் அமைச்சர் லொக்குபண்டார குறிப்பிட்டார்.

இலவச சீருடை விநியோகம் மாணவர்களுக்கான இலவச சீருடை எதிர்வரும் ஜூன் 27க்கு முன்னர் வழங்கப்படும். இதற்கான புடவைகள் மே மாதம் வந்துசேரும். எக் காரணம் கொண்டும் இலவசக்கல்விக்கு எந்தப் பாதகமும் ஏற்படுத்தப்பட மாட்டாது என்றும் அவர் கூறினார்.

# கல்விமாணி கற்கைநெறி விண்ணப்பங்கள் கோரல்

தேசிய கல்வி நிறுவக தமிழ் மொழித் துறையினரால் நடாத்தப்படவுள்ள 1994/96 கல்வியாண்டுக்கான தமிழைச் சிறப்பு நெறியாகக் கொண்ட கல்விமாணியப்பட்டகற்கை நெறியிற் பயில விரும்பும் சேவையிலுள்ள பட்டதாரிகள் அல்லாதோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அரசாங்கப் பாடசாலைகளிலும், அரச உதவி பெறும் பாடசாலைகளிலும் சேவையாற்றும் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர்கள், பாடசாலை அதிபர்கள், இலங்கை கல்வி நிருவாக சேவையைச் சேர்ந்தவர்கள், தேசிய கல்வி நிறுவகத்தில் சேவையாற்றும் அதிகாரிகள், கல்விஉயர்கல்வி அமைச்சில் சேவையாற்றும் அதிகாரிகள் விண்ணப்பிக்கலாம்.

பயிற்றப்பட்ட ஆசிரியர் தராதரப்பத்திரம் பெற்றபின் 3 வருட கால சேவையைப் பூர்த்திசெய்திருத்தல் அல்லது ஆசிரியப் பயிற்சி பெற்றபின் தேசிய கல்வி நிறுவகம் / கல்வி அமைச்சு / கல்வித் திணைக்களம் ஆகிய ஏதாவதொன்றில் 3 ஆண்டுகால சேவையைப் பூர்த்தி செய்திருத்தல் அல்லது பல்கலைக் கழகமொன்றினால் நடாத்தப் பெற்ற பொதுக் கலைத் தகுதித் தேர்வு, பொது விஞ்ஞானத் தகுதித் தேர்வு ஏதாவதொன்றில் சித்தி எய்திய பின்னர் 3 வருடகால ஆசிரிய சேவையைப் பூர்த்தி செய்திருத்தல் 01-05-1994 இல் 50 வயதுக்கு குறைந்தவர்களாக இருக்க வேண்டும். இத்தகைமைகளை உடையவர்கள் மகரகம தேசியக் கல்வி நிறுவக தமிழ் மொழித் துறைப் பணிப்பாளருக்கு விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது. விண்ணப்ப முடிவு திகதி நாளையாகும்.

### கொழும்பு

எந்த பகுதியுடனும் தொடர்பு கொள்ள முடியக்கூடிய ஒரு பாதையை பெற்று தர முயற்சி மேற்கொள்ள வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

1970 மார்கழி மாதம்4ஆம் திகதி அப்போதைய அதிவணக்கத்திற்குரிய பாப்பரசர் ஆறாவது சின்னப்பர் கொழும்பிற்கு விஜயம் மேற்கொண்ட போது பல நூற்றுக்கணக்காகஒன்று திரண்டு மகிழ்ந்தோம் ஆனால் இன்று அவ்வாறு நாம் வரமுடியாது எமக்கு இன்று ஓர் போக்குவரத்து பாதை இல்லை, அப்படி இல்லா நிலையில் நாம் வந்தாலும் எம்மை எந்த நேரமும் சிறிலங்கா பொலிசாரும் படையினரும் சுற்றி வளைத்து எம்மை கைது செய்யலாம். அதாவது எமது பாதுகாப்பு உத்தரவாதம் இல்லாத நிலையே இங்கு நிலவுகின்றது சில வேளை நாம் வந்த காரியத்தை நிறைவு செய்ய முன்னரே நாமும் எமது இளைஞர்களும் சிறைகளில் அடைக்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே உங்கள் பயணம் தொடர்பான முடிவை மீள்...

# சந்திரிகாவிற்கு கொலை பயமுறுத்தல்

தென் மாகாணசபை தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வரும் மேல் மாகாண சபை முதல் அமைச்சர் சந்திரிகா குமாரணதுங்காவுக்கு விடப்பட்ட கொலைஅச்சுறுத்தலை தொடர்ந்து அவர் கொழும்பு திரும்பியுள்ளார் எனசெய்திகள்மூலம்தெரிய வருகின்றது.

இதனால் ஒரு சில தினங்கள் இவரது பிரசாரம் தடைபட்டபோதும் மீண்டும் தனது தனிப்பட்ட பாதுகாப்பை பலப்படுத்திக்கொண்டு தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றார் என அச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றது.

### நரோனாவில்

...மதிக்கப்பட்டிருந்தனர்.

ஆனால் தற்சமயம் தீவுப் பகுதிகளில் இருந்து ஏற்றிச் செல்லும் பயணிகளின் அளவைக் குறைத் திருப்பதாகவும் யாழ்ப்பாணப் பயணிகளின் அளவைக்கூட்டியுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (ஜா),(தி)

### நரோனா

...ணம் செய்ய சுமார் 1250பேர் தமது பெயர்களைப் பதிவு செய்துள்ளதாக யாழ் அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

இக் கப்பல் இன்று காலை திருகோணமலையில் இருந்து ஒரு தொகுதி பயணிகளை ஏற்றிக்கொண்டு வந்தடையவுள்ளது என தெரிவிக்கப்...

களுக்கு ஒத்துழைப்பு வழங்காமையும் தான் இவர் அழைக்கப்படாமைக்குக் காரணம்

லேயே இவர் திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டுள்ளார் என்றும் தெரியவருகிறது.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**14.03.94**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 1251

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:-

41-9876, 27-5863, 41-9663, 26-6983, 40-2295, 28-8367, 26-5777, 27-9764, 26-1658, 24-6215, 42-8108, 41-4194, 26-9186, 28-9186, 27-2761, 26-2745, 26-4885, 42-3495, 40-2249, 27-5187, 27-5449, 27-4024

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்;

42-1722, 41-9989, 41-9167, 27-6415, 24-5529, 24-1209, 24-415, 43-1062, 41-7230,

ஹுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் மாலை 6 45 மணியளவில் பல ஆட்லறி ஷெல்கள் ஏவப்பட்டன;

இலந்தைக்காடு, திருவில் பகுதிகளில் மேற்குறித்த ஷெல்கள் பலத்த சத்தத்துடன் விழுந்து வெடித்தன: இலந்தைக் காட்டில் விழுந்து வெடித்த ஷெல் ஒன்றுக்கு இரண்டு மாடுகள் இறந்தன,

வல்லை, வளலாய்ப் பகுதிகள் மீது குண்டு வீச்சு விமானங்கள் பல தடவைகள் வட்டமிட்டு நோட்டமிட்டன, நேற்று பிற்பகல் 2.45 மணியளவில் பலாலியிலிருந்து வந்த பொம்பர் விமானங்கள் பேரிரைச்சலுடன் அப்பகுதியை வட்டமிட்டு நோட்டமிட்டது

அதே சமயம் நேற்று வல்லை வீதியில் சென்று கொண்டிருந்த பயணிகள் பஸ் ஒன்றின் மீது பொம்பர் விமானம் ஒன்று குண்டு வீசுவதற்காக குத்தி வந்துமேலெ...

...ங்கி மறைவிடங்களைத் தேடி ஓடினர், தாக்குவதற்காக வந்த பொம்பர் விமானம் பின்னர் சென்றுவிட்டது.

(யோ)

## வெளிநாட்டு

வெளிநாட்டு மத்தியஸ்தம் பற்றி சூசகமாகக்கூட எதுவும் அதில் குறிப்பிடவில்லை: அத்தகைய மாற்று வழியைக்கூட நாம் வலியுறுத்தவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க மார்ச் 2ஆம் திகதி ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா அமைச்சர் தொண்டமானுக்கு எழுதிய கடிதத்தின் விபரம் வருமாறு:

வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு மத்தியஸ்தத்தில் ஈடுபட கனடாவில் உள்ள குறிப்பிட்ட சில குழுக்களும், சில தனி நபர்களும் தயாராகி இருப்பது குறித்து எனக்கு தெரியப்படுத்தியமைக்கு உங்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன்;

உங்களுக்குத் தெரிந்தது போலவே வடக்கு - கிழக்கு பிரச்சினை ஒரு உள் நாட்டு விவகாரமாகும்; சகல அரசியல் கட்சிகளினதும் பங்குபற்றுதலுடனான பேச்சுவார்த்தைகளினூடாகவே அப் பிரச்சினை தீர்க்கப்படவும் வேண்டும்.

தற்போதைய சூழ்நிலையில் கனடியர்களைப் போன்ற வெளிநாட்டு மத்தியஸ்தர்களினால் ஆற்றப்படக் கூடிய பயனுள்ள பங்கு எதுவும் இல்லை.

உண்மையில் கியூபெக் பிரச்சினை போன்ற தாங்கள் எதிர்நோக்கும் உள் நாட்டு பிரச்சினைகளை தீர்ப்பதற்கு முதலில் கனடியர்கள் மத்தியஸ்தம் செய்வதே பொருத்தமானதாகும்;

கனடிய குழுக்களினாலும், தனிநபர்களினாலும் மேற்கொள்ளப்படும் இந்த அப்பாவிப் பிரயத்தனத்தை பத்திரிகைகள் பெரிதுபடுத்துவதை நான் காண்கிறேன்; இது உங்களுக்கும் அரசாங்கத்திற்கும் பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்துவதாகவும் இருக்கிறது. எனவே வடக்கு -கிழக்குப் பிரச்சினைக்கு இத்தகையோர் மத்தியஸ்தத்தை நாடுவது இலங்கை அரசுக்கு அக்கறை கிடையாது என்பதை மத்தியஸ்தம் செய்ய விரும்பும் அவர்களுக்கு நீங்கள் கூறிவிடலாம் என்று அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே உங்கள் பயணம் தொடர்பான முடிவை மீள் பரிசிலனை செய்யுமாறும் அவ்வாறு மீள் பரிசீலனை செய்ய முடியாது தாங்கள் சிறிலங்காவுக்கு பயணம் மேற்கொண்டால் எமது பகுதிக்கு சில மணித்தியாலங்கள் வந்து செல்லுமாறும் அதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க உதவியை நாடலாம் எனவும் அல்லா விட்டால் பொருளாதாரத்தடை மற்றும் போக்குவரத்து பாதையொன்றை திறக்க வற்புறுத்துமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் தெரிய வருகின்றது;

(ச), (தி)

(ஜா), (தி)

வுள்ளது என தெரிவிக்கப் பட்டது;

(பா, தி)

## Cake Icing and Hair Dressing

(கேக் ஐசிங்) உம் (சிகை அலங்காரம்)

**பயிற்சி நெறிகள்**

**ஆரம்பம்: 19-03-1994**

விபரங்கட்கு :

***North Ceylon Technical Institute***

**14, St. Peter's Lane, JAFFNA.** (இ-8839)

## யாழ் ஸ்ரீதர் திரையில்

சனி, ஞாயிறு பி. ப. 2 30 மணி காட்சியாக

**ஜனவரி 94 ஒளிவீச்சு**

காண்பிக்கப்படும்

(கேணல் கிட்டு உட்பட 10 வேங்கைகளின் நினைவு நிகழ்ச்சிகள்)

(இ-8841)

## மரண அறிவித்தல்

### மாதுரி வசந்தராஜா

மாதுரி வசந்தராஜா 14 03 94-ல் காலமாகிவிட்டார். இவர், வசந்தராஜா மல்லிகாதேவியின் நான்காவது மகளும்; மகிமைகுமார் (சம்பத்திரிசியார் கல்லூரி), மயூரன் (கொழும்புத்துறை மகா வித்தியாலயம்), மயூரி (கொழும்புத்துறை மகா வித்தியாலயம்) ஆகியோரின் சகோதரருமானவர்; அன்னாரின் பூதவுடல் 15-03-94 செவ்வாய் இன்று காலை 8-00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு வசந்தபுரத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

60/1, கொழும்புத்துறை றோட்,
சுண்டுக்குளி,
பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம். (சி-8838)

தகவல்
சி. வசந்தராஜா
(ரவி)
(தந்தை)


சகலவிதமான எலெக்ற்றோனிக் மின்சாரப் பொருட்களின்

முன்னோடி நிறுவனம் > **மின்வளம்**

இல. 81, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(இ8836)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81ஆம் இலக்கத்தில் உள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது